# காவேரி

ராய. சொ.



அழகுப்பதிப்பகம்

# காவேரி

✡

ராய. சொ.



அழகுப் பதிப்பகம்,
காரைக்குடி.

அழகுப் பதிப்பக வெளியீடு 4

இரண்டாம் பதிப்பு மார்ச் 1960

விலை ரூபாய் 1-00

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

# பதிப்புரை

---

தமிழ்க் கடல் திரு. ராய. சொ. அவர்களைத் தமிழ் உலகு நன்கறியும். தமிழ்க் கடலுள் திளைத்து, நம் தமிழுலகுக்கு அவர்கள் அளித்த நன் முத்துக்கள் பல. தமிழ்க் கல்விப் பரப்பாலும், சிறந்த வற்றுள் ஆழ்ந்து, ஆய்ந்து கண்ட அனுபவத்தாலும் அவர்களின் சொல்லும், எழுத்தும் தமிழ் மரபினதாய், சமய மணத்தினதாய், இன்ப விளைவினதாய் இலங்குகின்றன.

இந்நூலில் வரும் 'காவேரி' முதலிய கட்டுரைகளைக் காண்பவர், மேற்கூறியவற்றின் உண்மையைத் தாமே அறிவர். தமிழுலகுக்கு இத்தகைய கட்டுரைகளை நூல் வடிவில் தர, இசைந்த தமிழ்க் கடல் திரு. ராய. சொ. அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகும்.

தமிழகம் இந்நூலை ஏற்று இலக்கிய இன்பத்தில் திளைக்க வேண்டுமென்பதே எமது நோக்கமும் வேண்டுகோளுமாகும்.

காரைக்குடி
10-3-60

கா. முத்து,
உரிமையாளன்,
அழகுப் பதிப்பகம்.

# உள்ளுறை

# காவேரி

"பாடல்சால் சிறப்பில் பரதத்தோங்கிய கோடாச் செங்கோல் சோழர்தங் குலக்கொடி" என்று கூறினர், இனிய அழகிய தெளிந்த சொற்களை வடித்துக் கோத்த 'மணிமேகலை' நூலில், சீத்தலைச் சாத்தனர் என்னும் பழம் பெரும் புலவர் அவர் சொன்ன குலக்கொடி, யார்? அவரே காவிரி, அல்லது காவேரி, அன்றிப் பொன்னி என்னும் நங்கையார். புலவர் பாடும் சிறப்பமைந்த பாரத நாட்டிலே, நல்லரசு செலுத்தும் வளையாத செங்கோலை யுடைய சோழ மன்னர்கட்குக் குலக்கொடியாகி விளங்கு பவள் காவேரி. அவள் தந்த செல்வமே சோழநாட்டின் வாழ்வு. உலகம் நிலைகுலைந்து தலைதடுமாறலாம்; கோள்கள் வக்கரிக்கலாம்; சந்திர சூரியர் தெற்கு வடக் காக மாறலாம். அத்தகைய ஒரு நிலை தோன்றினும், காவிரி தன் நிலையில் மாறுபடமாட்டாள். வானம் பொய்த்து மழைத்துளி அரிதாகிவிடலாம். அக்காலத்தும் காவிரி, தான் சுரக்கும் வளத்தைப் பொய்ப்பிக்கமாட் டாள். இன்ன பெருங் கருத்தமைத்துக் காவிரியைச் சிறப் பிக்கும் நமது சாத்தனர் சித்திரம் சால அழகுடையது.

"கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை."

காவிரி ஒரு தமிழ்ப் பெண். தண்டமிழ்ப் பாவைஎன்று சொல்லும் பொழுது வாய்கொள்ளாத மகிழ்ச்சியை அடைகின்றேம். ஏறக்குறைய இதே கருத்தைப் பின் வரும் சிலப்பதிகார அடிகள் வலியுறுத்துகின்றன.

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்ருெடும்
சூல்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்ப∴ ருரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரி"

கவியரசர் பாரதியார்,

"காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி - என
மேவிய ஆறு பலவோடத் திரு
மேனி செழித்த தமிழ் நாடு"

என்று, தமிழ்த்தாயின் உடலைக் குளிர்ப்பிக்கும் நதிகளுக்குத் தலைமைப் பதவியைக் காவிரிக்குச்சூட்டியது பெரிதும் பொருத்த முடையது.

"தண்ணீருங் காவிரியே"
"தண்காவி வயல் வளஞ்சூழ் காவிரி"
"சோழ வளநாடு சோறுடைத்து"

என்பன போன்ற தனிப்பாட்டுச் சொற்ருெடர் பெரிதும் வழங்கப் பெறுகின்றன. சோழவளநாடு சோறுடைத்தாக விளங்குவது எதனுல்? காவிரியினுலேயே. காவிரி, குடகு நாட்டிலே பிறந்தாள். கொங்குநாட்டிலே ஊர்ந்தாள். சோழநாட்டிலே தவழ்ந்து நடந்து இடங்கள் தோறும் பரந்து விளையாடிக் கடலோன் என்னும் கணவனை அடைகின்ருள். சோழ மண்டலத்திலே அவள் தவழாத நடவாத இடம் அரிது. சோழநாட்டார், ஒரு போகமல்ல, இருபோகமும், முப்போகமும் பெற்று, இன்புற்று வாழக் காரணமானவள் காவிரித் தாயே.

"தாங்கா விளையுள் காவிரிநாடு"

என்று சாற்றுகிருர் இளங்கோவடிகள். காவிரி சூழ்நாடு, தாங்காத விளையுளை, அதாவது நிலம் பொறுக்க

முடியாத அளவு விளைவை உடையது என்பது பொருள்.

'' தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் ''

என்னும் சிலப்பதிகார அடிகள் இனிமைவாய்ந்தன. மேலும் காவிரி என்னும் மாதரசி, எண்ணற்ற ஆரவாரங்களோடு நடந்துவருவதைப் பின்வரும் வரிப்பாடலால் சித்திரிக்கின்றார், சிலப்பதிகார ஆசிரியர்:

''உழவர்ஓதை மதகுஓதை உடைநீர்ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தஎல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன்தன் வளனே வாழி காவேரி.''

இனிச் சோழவள நாட்டை மகவாக வளர்க்கும் தாயாகின்றாள் காவேரி என்னும் மற்றொரு வரிப்பாடல்:

''வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும்தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி
ஊழிஉய்க்கும் பேருதவிஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழிஆள்வான்பகல்வெய்யோன்அருளேவாழிகாவேரி''

இளங்கோவடிகளின் இவ் உயர்கருத்தைத் தழுவிய சேக்கிழார் அடிகள் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது:

'' சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாள்தொறும்
உய்யவே சுரந்தளித்து ஊட்டும் நீரது.''

காவிரியாறு, பெரிய மலையினிடத்தே பழகிய சிறப்புடையது. அவ் ஆறு, செவ்விய பூமடந்தையை வளர்க்கும் நல்ல செவிலித்தாயைப் போன்றது. வையகத்திலே உள்ள பல உயிரையும் நாள்தோறும் வளர்த்து அவை உய்யுமாறு அருள்சுரந்து ஊட்டும் தன்மை வாய்ந்தது, அப்பொன்னி மாநதி. நிற்க, காவிரியை இறை ஒரு

பாகத்து உறையும் அம்பிகையோடு ஒப்பிட்டு ஒரு கற்பனை செய்கின்றார் சேக்கிழார். இறைவி உயர்மலையினால் பெறப் பெற்றாள். காவிரியும் மலையினால் பெறப்பெற்றவளே. இறைவி பல அறங்களையும் வளர்க்கின்றாள், காஞ்சிமாநகரில், அறம் வளர்த்த நாயகியாக அமர்ந்து "இச்சைப்படி தன் பேரறம் எண்ணான்கும் வளர்க்கும் பச்சைக்கொடி" யைப்போல், பொன்னி நங்கையும் தான் சுரக்கும் வளத்தினால் செல்வம் பெருகச்செய்து எங்கும் அறத்தை வளர்க்கின்றாள். எனவே, உமையின் கருணையைப் பொன்னியும் உடையவளாகின்றாள் என்பது கருத்து. பாவைப் பாருங்கள்:

"வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உள்நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது"

இது தவிரப் பெரியபுராண ஆசிரியர் காவிரியைப்பற்றி ஆங்காங்குக் கூறிய சொற்றொடர்கள் சிந்திக்கத்தக்கன:

"பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி"

"ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி"

"நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னி"

"பூந்தண் பொன்னி எந்நாளும்
பொய்யா தளிக்கும் புனல்நாடு"

"பூத்த பங்கயப் பொகுட்டின்மேல் பொருகயல் உகளும்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாடு"

"நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவு
மாடு பொன்கொழி காவிரி."

இவை சேக்கிழார் ஊக்கத்தோடு உரைக்கும் காவிரிப் பெருக்குகள். கவிச்சக்ரவர்த்தி கம்பர், சீதையைத் தேடவிட்ட வானரர்களைப் பார்த்து,

"நளிர்நீர்ப் பொன்னிச்
சேடுறுதண் புனல்தெய்வத்
திருநதியின் இருகரையும் சேர்திர் மாதோ"

என்று இயம்புகிறார். அவர் கூறியவாறு தண்டக நாட்டைக் கடந்து பொன்னிநாடு என்ற காவிரி நாட்டை அடைந்தனர் வானரர். அங்கே அவர்கள் பெருந்துன்பத்துக்கு உட்பட்டுவிட்டனர். காரணம் என்ன? செந்நெலும் கரும்பும் கமுகும் நெருங்கி அவர்களை விரைந்து நடக்கவிடாமல் வழி மறைத்தன. அன்னார் மிகுந்த சிரமத்தோடு அந்நெறி கடந்தனர்.

"அன்ன தண்டக நாடு கடந்துஅகன்
பொன்னி நாடு பொருவிலர் எய்தினர்
செந்நெலும் கரும்பும் கமுகும் செறிந்து
இன்னல் செய்யும் நெறிஅரிது ஏகுவார்"

என்பது பாட்டு.

கருணைக்கு எடுத்துக் காட்டாகக் காவிரியைக் கொள்கின்றார் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார். நளச் சக்ரவர்த்தியைப் பற்றிச் சொல்லவந்த இடத்தில், பாரதத்தில்,

"காவிரி யென்னத் தப்பாக் கருணையான்"

என்று கூறுகின்றார். காவிரியின் உயர்வை இதற்குமேல் அலங்கரித்தல் இயலாதென்று சொல்லலாம். மேலும், பார்த்தன் திருவரங்கத்தைத் தொழுதான் என்று சொல்லும்போது, காவிரி இரு மருங்கும் வருதலால் நில

மகளுக்கே ஒரு தனி அழகாக விளங்கும் ஸ்ரீரங்கத்தைத் தனஞ்செயன் வணங்கினுன் என்று பின்வரும் பாட்டால் சொல்கின்ருர்.

"இலங்காபுரி முன்செற்றவன் இருபோதும் வணங்கத்
துலங்குஆடுஅர வணைமேல்அரி
துயில்கொண்டவர் பொற்ருள்
பொலங்காவிரி இருபாலும் வரப்பூதல மங்கைக்கு
அலங்காரம் அளிக்கும்தென் னரங்கத்திடைதொழுதான்."

குலசேகரப் பெருமாள் திருவரங்கத்தை நினைந்து மனமுருகிப் பாடுகின்ருர். இருளை ஓட்டும் கண்ணைப் பறிக்கும் ஒளியையுடைய மணிகள் விளங்கப் படமெடுத் திருக்கும் அநந்தன் என்னும் அரவு அரசனுகிய வெண்மை மிக்க அணையின்மீது பள்ளிகொண்டிருக்கின் ருர் திருமால். எங்கே? திருவரங்கப் பெருநகரில் - அந் நகரில் இருமருங்கும் திகழ்கின்ற காவிரி என்ன செய் கின்ருள்? தெற்கு நோக்கி அறிதுயில் கொள்கின்ற கடவுளுக்கு-அவ் அநந்தசயன நெடுமாலுக்கு-அக்கோம ளத்திற்கு - அந்தக் கருமணிக்கு, தனது அலைகளாகிய கைகளால் திருவடி வருடுகின்ருள் காவிரி. தன் திரைக் கையால் கால் தைவருகின்ருள் பொன்னி. இது குல சேகரப் பெருந்தகை காட்டும் படம்.

"இருள்இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவுஅரசப் பெருஞ்சோதி அநந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே."

அரங்கநாதனுக்கு அலைக்கையால் அடி வருடுகின்ருள் பொன்னி. அக்காவிரி, தன் கால்களால் என்ன செய்

கின்ருள்? சோலேகளே உழக்கிக் கலக்குகின்ருள். "காலால் தண்டலே உழக்கும் காவிரி" என்று கூறு கின்ருர், பரணிக்கோர் சயங் கொண்டார், தாம் பாடிய கலிங்கத்துப் பரணியில்.

காவிரியின் வற்ரு வளம் சுரக்கும் நீர்மையை மிகப் பழம் பாடலாகிய பட்டினப்பாலே,

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்குஏகினும்
தற்பாடிய தளிஉணவில்
புள்தேம்பப் புயல்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலேத்தலேய கடற்காவிரி"

என வர்ணிக்கின்றது. பத்துப் பாட்டுகளுள் மற்ருெரு நூலாகிய பொருநர் ஆற்றுப்படை,

"குல்லே கரியவுங் கோடெரி நைப்பவும்
அருவி மாமலே நிழத்தவும் மற்றக்
கருவி வானம் கடற்கோள் மறப்பவும்
பெருவறன் ஆகிய பண்பில் காலேயும்
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலேக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைய
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து,
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்ருக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளேயுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு"

எனப் பாராட்டுகின்றது.

இரவி நான்கு திக்குகளினும் தோன்றினுலும், வெள்ளிமீன் தெற்கே முளைத்தாலும், காவிரி பல பிரிவுகளாகப் பிரிந்து, பரந்து, மக்கட்கு ஊட்டி வளர்க்கும் தன்மையில் மாறுபடமாட்டாள் என்னும் தொல்லாசிரியர் பலர் கருத்தையும் வலியுறுத்திப் பின்வரும் வரிகளால் புறநானூறு புகல்கின்றது:

"அலங்கு கதிர்க்கனலி நால்வயிற் ரேன்றினும்
இலங்கு கதிர்வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர்பு ஊட்ட."

திருஞானசம்பந்தப்பெருமான் காவிரியை அலங்கரித்துக்கூறும் பின்வரும் பாசுரங்களைப் படித்து மகிழ்வோம்:

"மணியார்தரு கனகம்மவை வயிரத்திர ளோடும்
அணியார்மணல் அணைகாவிரி ஆலந்துறை அதுவே"

"மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செங்நெலார் வளவயல் தென்குடித் திட்டையே"

"விடலேறு படநாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவை யோடும்
அடலேறுஒன் றதுஏறி அஞ்சொலீர்
பலியென்னும் அடிகள் கோவில்

கடலேறித் திரைமோதிக் காவிரியின்
உடன்வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்துஅங்கு
ஈன்றுஅலைக்கும் திருவை யாறே"

"எண்டோளர் முக்கண்ணர் எம்மீசர்
இறைவர்இனிது அமருங் கோவில்
செண்டாடு புனல்பொன்னி செழுமணிகள்
வந்தலைக்கும் திருவை யாறே"

இனித் திருநாவுக்கரசு அடிகளார்,

*"சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்*
*திருவானைக் காவுடைய செல்வா"*

என்றும்,

*"திரையாரும் புனல்பொன்னித் தீர்த்தமல்கு*
*திருவானைக் காவிலுறை தேனே"*

எனவும்,

*"என்னுனைக் கன்றினைஎன் ஈசன் தன்னை*
*யெறிநீர்த் திரையுகளும் காவிரிசூழ்*
*தென்னுனைக் காவானைத் தேனைப் பாலைச்*
*செழுநீர்த் திரளைச்சென் ருடினேனே"*

என்றும் கூறி ஆடிப்பாடி இன்புறுகின்ருர்.

*"சந்திரேடு மணியும் கொழிக்கும் புனற் காவிரி"*

என்று போற்றுகின்ருர் திருமங்கை மன்னர்.

*"தழுப்பரிய சந்தனங்கள் தடவரைவா யீர்த்துக்கொண்டு*
*தெழிப்புடைய காவிரிவந்து அடிதொழும் சீரங்கம்"*

என்று பெருமிதத்தோடு பேசுகின்ருர் பெரியாழ்வார்.

"கங்கையிற் புனிதமாய காவிரி" என்று இறும்பூதோடு பாடுகின்ருர் தொண்டர் அடிப்பொடியாழ்வார். உலகத்திலேயே புனிதமானது என்று கருதப்படுகின்றது கங்கை. அதினும் புனிதத் தன்மை வாய்ந்தது காவிரி என்று ஏன் சொன்னுர் ஆழ்வார்? காசிமா நகரில் கங்கையாறு இறந்தார் உடல்களை ஏராளமாக வாரிக்கொண்டு வரும் நிலைமையை அடைந்து ஓரளவில் புனிதத் தன்மையை இழந்தது போலல்லாமல், காவிரியாறு முழுப் பரிசுத்தமாக விளங்குகின்றது என்பது, திருமாலை நினைந்து உள்ளம் கசிந்து நெக்கு நெக்குருகி, 'திருமாலை' என்னும் பிரபந்தம் பாடிய தொண்டர் அடிப்பொடியார் கருத்துப்போலும். அவ்வாறு நினைந்துதான் 'கங்கையிற் புனிதமாய காவிரி'

என்று ஆழ்வார் பாடியிருத்தல்வேண்டும். காவேரியைத் தமிழ் நாட்டார் போற்றும் முறை சாலச் சிறந்ததொன்று. தமிழ் நாட்டிலுள்ள மற்றெந்த ஆற்றின் பெயரையும் தமிழர் தம் மக்கட்குச் சூட்டக் கண்டோமில்லை. ஆனால் "காவேரி" என்ற பெயர் மலிந்து கிடக்கக் காண்கின்றோம். ஒன்றை வாழ்த்தும்போது 'கல்லும் காவேரியும் உள்ளவரை' என்று சொல்லக் கேட்கின்றோம். காவிரியைக் குறிக்கும் 'பொன்னி' என்ற சொல் நெஞ்சை அள்ளவல்லது. பொன்னி என்ற பெயரை ஏன் பெற்றது காவிரி? அதன் இருகரையும் அது பொன்னைச் சொரிதலாலேயே. பொன்னை அது நேராகக் கொட்டவில்லை யென்றாலும் அதன் விளைவு பொன்னைக் குவிக்கின்றது அல்லவா? காவிரியைப்போல் பொன்னைக் கொழிக்கும் யாறு வேறில. அது கொண்டே "மாடு பொன் கொழி காவிரி" பொன்னி என்ற செல்லப் பெயர்பெற்றது. பொன்னி வாழ்க! காவிரி வாழ்க! என்று வாழ்த்துவது மக்கள் ஆற்றலுக்கு மேம்பட்ட செயல். எனவே, பொன்னியைப் போல, காவிரியைப் போல, அனைவரும் வாழ்க என்று கூறுவோம்.

# இளவேனிற் காலம்

இளவேனிற் காலம், ஆறு காலங்களுள்ளும் சிறப்பாகக் கொள்ளப்பெறுகிறது. இது, புராணக் காரரைப்போல எடுத்துக்கொண்ட பொருளே உயர்ந்தது எனச் சொல்லவேண்டும் என்னும் கருத்தாற் கூறுவ தன்று. கவிகளின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ள வல்லது இளவேனிற் காலம். புலவர் பாடும் புகழ் அமைந் தது இளவேனிற் காலம். கடவுளர்க்கு விழா எடுக்கப் பொருந்தி நிற்பது இளவேனிற் காலம். மயிர்க்கால் தோறும் உயிர் உறும் அமுதத்தை ஊட்டும் கொழுந் தென்றலைக் கொணர்வது இளவேனிற் காலம். செழுமதி தவழ் நிலவின் முழுத் தன்மையையும் மக்கள் நுகர உதவுவது இளவேனிற் காலம். காதலரை இன்பக் கடலாட்டும் ஆற்றல் சான்றது இளவேனிற் காலம். காதலர்ப் புணர்ந்தோர்க்கு இளவேனிற் காலம் களி மகிழ்வு ஊட்டும்; ஆனால் தாழ் துணை துறந்தோர்க்கு அக்காலம் தனித் துயரே நல்கும். இளவேனிற் காலத் துக்கு அரசன் யார்? மன்மதன். அவனுக்கு 'வேனில் வேள்' என்பது சிறப்புப் பெயர்.

> "மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
> இன் இளவேனில் வந்தனன்"

என்றார் சிலப்பதிகார ஆசிரியர். "மாரனை மகுடஞ்சூட்ட வந்தது வசந்த காலம்" என்று இயம்பினர் பாரதம் பாடியவர். வசந்த காலந்தான் இளவேனிற் காலம் என்பது. அக்காலம் சித்திரை, வைகாசி மாதங்கள்;

தமிழர்க்குப் புதிய ஆண்டு பிறக்கும்போது மன்னன் மாரன் மகிழ் துணையாகிய இன்னிளவேனிலும் பிறக்கின்றது. அது எப்படிப் பிறக்கின்றது?

*'' செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக*
*மைந்தார் அசோக மடல்அவிழக் - கொந்தார்*
*இளவேனில் வந்தது ''*

இளவேனிலில் உருவிலான் என்றும், வடிவழகன் எனவும் பாராட்டப்படும் காமனின் ஆட்சியே, யாண்டும். அவ்வேனிலான் தனக்கு உறுதுணையாக இன்பப் பொருள் பலவற்றைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிருன். மாரன் ஊரும் தேர் பிள்ளைத்தென்றல்; அவன் ஊதுங் குழல், குயில்; அவன் அரசு வீற்றிருக்க ஆய்ந்தெடுத்த இடம், நறுமலர்ச் சோலை. அதற்குப் பெரிதும் பொருந்திய நேரம், அந்தி மாலை. அன்னுன் ஆட்சியை எடுத்து உலகம் முழுதும் விளக்கும் பொறுப்பை மேற்கொண்டவன், தண்ணமுதாகிய நிலவருளும் திங்களஞ் செல்வன். இன்ன பெருமை வாய்ந்த மாரனை மகுடஞ் சூட்ட வந்தது எது ? அதுதான் வசந்தகாலம் - இளவேனிற் காலம். இவ்விளவேனிற் காலம் பற்றிப் புலவர் பாடிய பாக்கள் எண்ணிறந்தன.

*'' மலர்ச்சூழல் அமர்ந்துஇனிய*
*வண்டுஆர்க்கும் காலம்*
*வரிக்குயில்கள் மாவில்இளந்*
*தளிர்கோதும் காலம்*
*சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல்*
*அமுதுஅளிக்கும் காலம்*
*தீவினையேற்கு அத்தென்றல்*
*தீவீசுங் காலம்.''*

இறகுகளை விரித்துக்கொண்டு மலர்களை நன்ருக உழக்கி, பெடையொடும் அமர்ந்து தேனைக் குடித்துக்கொண்டு

வண்டுகள் ரீங்காரம் செய்யுங் காலம் இளவேனில். வரிக் குயில்கள் மாமரத்தின் மெல்லிய தளிர்களைக் கோதி விளையாடுங் காலம் இளவேனில். 'செழுமையான தென்றலைக் கொண்டு, சிலர்க்கு - காதலனோடு உடனிருந்து களியாட்டயரும் சிலர்க்கு, அமுதத்தைக் கொடுக்கும் காலம் இளவேனில். ஆனால், காதலனைப் பிரிந்து வாடும் தீவினையுடைய எனக்கு, அத்தென்றல், - வேறுசிலர்க்கு அமிழ்தம் அளித்த அதே தென்றல், நெருப்பைக் கக்கும் காலம் இவ்விளவேனில்!' என்று பிரிவுத் துயரால் வாடும் ஓர் இளங்கொடி புலம்புகின்றாள். 'குழல் இனிது' என்று புலவர் பாடிய புல்லாங்குழல் இனிய தேனைப் பொழி கிறது. பயன் என்ன? அம்மெல்லோசையின் குளிர்ச்சியைப் பிரிவு என்னும் நெருப்பால் வெந்து கொண்டிருப்போர் நுகர்வது எங்ஙனம்? குழலினின்றும் எழும் இளந் தமிழ் இன்னிசை அந் நங்கையார் காதுகளில் பெருந் தீயை உருக்கிக் கொட்டுவதுபோல் இருக்கின்றது. "ஈர நெடுங்குழலிசையில், பேரழலும் புகுந்தது." அதில் மட்டுமா? பனிநீர் தெளித்த வெஞ்சாமரக் காற்றிலும் அன்னார் அந் நெருப்பையே காண்கின்றனர்; இள வேனிற் காலத்தில் தண்ணளியை அள்ளி யெறியும் இளநிலாவிற்கூட அவர்கள் காண்பது அவ் அழலையே. ஆம்! அப் பிணிவாய்ப் பட்டோர் இயற்கை அதுவே அன்றோ?

*"ஈரநெடுங் குழல்இசையில் இயங்கியசா*
*மரக்காற்றில் இளநிலாவில்*
*பேரழலும் புகுந்ததுஎனப் பிணங்கினர்*
*தங்கேள்வர்ப் பிரிந்த மாதர்."*

பிரிந்தோரை இளவேனில் வருத்தத்தான் செய்யும். ஆனால் சேர்ந்தோர் பெறும் இன்பம் கணக்கிலது. "மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும், இன்னிள

வேனில் இளவரசன்'' என இளவேனில் சிறப்பித்துக் கூறப்படுதல் காண்க. அப் பிணிக்கு மருந்து எது? நாயகன் கூடுதலே. உருவிலான் புரியும் கலகத்தை அகற்ற வல்லவர் காதலரே.

*'' இரதிகேள்வன், கலகம்இடும் பரிதாபம் அகற்றினூர் இனிமையுடன் கலந்த கேள்வர்.''*

பிரிவுத் துயரை மாற்ற மருந்துண்டு. அது காதலர் சேர்க்கை. ஆனல் தகாத வழியில், - கிட்டாத இடத்தில் இன்பம் துய்க்க விரும்புவார் அல்லல் தீர்க்க மருந்து இல்லை. ''மந்திரமில்லை வேரூர் மருந்தில்லை'' எனினும் ஒரு மருந்துண்டு. அதுதான் ''நுமது சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுது'' என்று ''உலகினுக்கே அன்னை'' யான சீதையைப் பார்த்து இராவணன் கூறுகின்றான். அது இராவணனின் விரகதாப மிஞ்சிய அறியாமைக் கூற்று. அது அமுதாக இருக்கலாம். அதை அப் பேதை பெறுவது எங்ஙனம்? எனவே, அவன் கொண்ட பிணிதீர வழியே இல்லை. இளவேனிலும் அதன் துணைகளும் அன்ன நீர்மையாளரை, வாள்கொண்டு அறுக்கத்தான் செய்யும்; மதிக்கு மேனி சுடத்தான் செய்யும்; தூற்றும் தென்றல் வியர்வையைத்தான் எழுப்பும்; வயிரத்தோள் துரும்பாகவே மெலியும்; வேனில்வேள் ஆரவாரம் பெரிதாகத்தான் இருக்கும்; இராவணன் நோய் அவன் முடிவோடுதான் முடிந்தது. இளவேனில் நலத்தைப் பெற விழைவோர் ஒழுங்கு முறையில் பிழைத்தல் தகாது.

இளவேனில் கலகம் எழுகின்றது. எங்கே? அது எங்கே எழுமோ, அங்கேதான். பசுமையான குளிர்ந்த சோலையில். ''கலக்கமுற இளவேனில் கலகம் எழுந்திடும் பசுந்தண் காவுதோறும்.'' அக் காவிலே என்ன நடக்கின்றது? தென்றற்காற்று வீசுகின்றது; அக் காற்றின்

பின்னே, அத் தென்றலைத் தொடர்ந்து, சங்கிலிப் பின்னல்போல் வண்டுக் கூட்டங்கள் சேர்ந்து ஓடுகின் றன. அவ் வண்டுத் தொடர் எப்படியிருக்கின்றது? மன்மத மன்னன், தன் கரும்பு வில்லில் பூட்டுவதற்கு நாண் என்று சொல்லப்படும் கயிறுதிரிப்பது போல் இருக்கிறது. "சிலைக்கு அணி நாண் முறுக்குவபோல் தென்றலின் பின் சுழல் அளிகள் சேர ஓட."

"காலையும் மாலைதானும் இல்லதோர் கனகக்கற்பச் சோலையிலே, காமராஜன் கொலு வீற்றிருக்கிருன். காலம் இளவேனில் என்பது சொல்லாமலே அமையும். கையில் கரும்பு வில் பிடித்திருக்கின்ருன். அதில் பூட்டு தற்கு நாணை முறுக்கிவிட்டான். இனி வேண்டுவது என்ன? வில்லில் பொருத்தி விடுதற்குரிய அம்புகளே யன்ரே? அவைகள் விரைவாகச் செய்யப்பெறுகின்றன. எங்கே? அச்சோலையிலேயே. உலைக்கூடம் அமைக்கப் படுகின்றது. பாணங்கள் செய்வதற்கு எடுக்கப்பட்ட பொருள்கள் எவை? அழகிய நிறங் கிளர் பலவகையான இளந்தளிர்களே, மாரன் கொலைக்கணைகள் சமைப் பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரும்புத் துண்டுகள். கணைசெய்யும் கருங் கொல்லன் யார்? குயில் என்ற பெயரிய கறுநிறமுடையவன். சரம்செய்ய அக்குயிலோன் ஆண்ட கருவிப்படையெது? அவன்தன் அலகு என்னும் சிறு பற்றுக்குறடு. இத்துணை விமரிசையாக மாரனுக்குக் கணை செய்யப்படுகிறது, சோலைத் தொழிற்சாலையில். "உலைக்கனலிற் கருங்கொல்லன் சிறுகுறட்டால் தகடு புரிந்து ஒதுக்கி, மாரன் கொலைக்கணைகள் சமைப்பன போல் குயில் அலகால் பல்லவங்கள் கோதும்." செய்யப் பட்டது இலைகளாலேயே. எனினும், கணை பொல்லாதது கொலைக்கணை! இளவேனிலைப் பற்றிய ஒரு அழகான சித்திரமிது. முழுப்பாட்டையும் பார்ப்போம்:

"கலக்கமுற இளவேனில் கலகமெழுந்
திடும்பசுந்தண் காவு தோறும்
சிலைக்கணிநாண் முறுக்குவபோல் தென்றலின்பின்
சுழல்அளிகள் சேர ஓட
உலைக்கனலில் கருங்கொல்லன் சிறுகுறட்டால்
தகடுபுரிந்து ஒதுக்கி மாரன்
கொலைக்கணைகள் சமைப்பனபோல் குயில்அலகால்
பல்லவங்கள் கோது மாலோ!"

இனி இன்னொரு கற்பனை. காலம்இளவேனில் தான். அதைக் கார் காலம்என மயங்கி மகிழ்கின்றன மயில்கள். மயில்கள் மகிழும் காலம் மழைக்காலம். இளவேனிலைச் சாயல் தோகை கார் காலமெனக் கொண்டு களிக்கின்றது ஏன்? கார்காலத் தோற்றங்களை யெல்லாம் மயில், இள வேனிலில் காண்கிறது. வசந்த காலத்தில் மெல்லியலார் கூட்டங் கூட்டமாக உலாவுகின்றனர். அவர்களின் கரிய நெறித்த கூந்தல், மழைக்காலத்து அணி அணியாகச் செல்லும் நீருண்ட கரிய முகிற் கூட்டம் போன்றிருக் கிறது; அம் மாதரார் அசைவு, மேகத்தினின்றும் புறப் படும் மழை மின் வெட்டுப்போல் பளீர் பளீர் என்று அடிக்கின்றது; அம் மங்கையர் வளைந்த புருவம், மழைக் காலத்து வானத்தே தோன்றும் பல நிற, வானவில்லைப் போன்றிருக்கிறது; அவ் அமுதனார் செவ்இதழ், கார் காலத்தே உதிக்கும் மிருதுவான செந்நிறமுடைய பட்டுப் பூச்சியை நினைவூட்டுகின்றது, அவ் இன் சொலார் பற்களும், மூக்கும், கைகளும் பிறவும் மழை நாளில் பூக்கும் இனிய பூக்கள்போல் விளங்கித் தோன்றுகின் றன. அப் பொன்னனையார் மார்பில் அணிந்திருக்கும் வெள்ளிய முத்துமாலைகள், மழைக் காலத்து மலையினின் றும் வீழும் அருவிகளை நிகர்க்கின்றன. தையலார் வடிவு தோறும் இன்ன பொருள்களைக் கண்டதும், இவ் இள

வேனில் நாம் மகிழ்வதற்குரிய கார்கால மாகவன்ரே இருக்கிறது எனச் சாயல் தோகை கருதிக் களித்தது.

''கொண்டல்எழ மின்னுடங்கக், கொடுஞ்சாபம்
வளைவுறச்,செங் கோபம் தோன்ற,
வண்தளவும், நறுங்குமிழும், வண்டணிகாந்
தளும்மலர, மலைகள் தோறும்
தண்தரள அருவிவிழத், தையலார்
வடிவுதொறும் சாயல் தோகை,
கண்டுநமக்கு இளவேனில், கார்காலம்
ஆனதுஎனக் களிக்கும் மாலோ.''

இஃது ஓர் மயக்க அணி. இளவேனிலைக் கார்கால மாக மயில் மயங்கியது. மயில் மழைக்காலம் கண்டால் மகிழும். ஆனல் மந்தி இதற்கு மாறுபட்ட இயல்புடையது. அது மழையைக் கண்டு வருந்துகின்றது. நல்ல இளவேனிலைக் கார்காலமென நினைத்துவிட்டது குரங்கு. காரணம் என்ன? வசந்த விழா நடக்கின்றது கோவிலில். பெண்கள் பக்தி மேலிட்டுச் சந்நிதிமுன் நடம் பயில் கின்ருர். மத்தளம் முழங்குகின்றது. அத் தோற்றம் அணித்தே நின்ற குரங்குகட்கு மயில்கள் ஆடுவன போலவும் மேகங்கள் குமுறுவன போலவும் காட்சியளித் தன. மடவார் ஆடுவதை மயில் ஆடுவதாகவும், முழவு அதிர்வதை மேகமுழக்கமாகவும் கருதிவிட்டன மந்திகள். மழை யென்ற அச்சம் அவற்றிற்கு வந்துவிடவே, விரை வாகத் தாவிக் குதித்து மரத்தின்மீது ஏறின அக் குரங்கு கள். ஏறி என்ன செய்தன அவை? வானை உற்று நோக்கின. முகில் திரண்டு நிற்கின்றனவா? என்று ஆராய்ந்தன.

''வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்று அஞ்சிச்

*சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்*
*திருவை யாறே.''*

என்பது பாட்டு. நிற்க, இளவேனிலைச் சிறப்பிப்பதில் முதன்மை வாய்ந்தது எது? அதுதான் தென்றல் என்பது. தென்றல் இளவேனிற் காலத்தேதான் உலவும். தென்றல் மன்மதனுக்கு ஊர்தியாக அமைந்த தன்றி, இளவேனில் என்பானுக்கு அது தூதாகவும் பொருந்தி நிற்கிறது. நல்ல தூதன் கருணையங் கடலாகிய இராமனுக்குப் பேரறிவாளனாகிய அநுமான் தூதனாக வாய்த்ததுபோல், இன்னிளவேனில் என்னும் அரசிளங் குமரனுக்கு அகத்தியன் பயந்த தென்றலஞ் சிறுவன் தூதனாக நின்றான். இளவேனிலின் வருகையை அறிவுறுத்துபவன் தென்றலானன்றோ? தென்றல் புறப்பட்டால் இளவேனில் வந்துவிட்டது என்பது பொருள்.

*'' இன்னிள வேனில் வந்தனன் இவண்என*
*வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த*
*இளங்கால் தூதன் இசைத்தனன்.''*

இளவேனில் வந்துவிட்டான் இங்கு என்று வளம் மிகுந்த பொதிகைமலைவாழும் மாமுனிவனால் பெறப்பட்ட இளங்காற்றாகிய தூதன் சொற்றனன்.

*''பொங்குதமிழ்ப் பொதிகைமலைப்*
*பிறந்துபூஞ் சந்தனத்தின்*
*கொங்குஅணைந்து கொழுஞ்சாரல்*
*இடைவளர்ந்த கொழுந்தென்றல்,*
*அங்கணையத் திருவாரூர்*
*அணிவீதி அழகரவர்*
*மங்கலநாள் வசந்தம்எதிர்*
*கொண்டணையும் வகைநினைந்தார்''*

என்ற பாட்டு இதே கருத்தைத் தழுவியது.

இளவேனில், சிற்றின்பம் என்று செப்பப்படும் ஒன்றை விரும்புவார்க்குத்தான் இன்பம் தரும் என எண்ணுதற்கு இல்லை. பேரின்பத்தில் திளைக்கும் பெரியார்க்கும் இளவேனில் இன்பம் ஈகின்றது. இறைவனுடைய திருவடி நீழலை, குற்றமற்ற வீணையின் இனிய ஒலியாகவும், மாலைக்காலத்து மதியாகவும், வீசுகின்ற தென்றலாகவும், மொய்த்து வண்டுகள் ஒலமிடுகின்ற தேன் பிலிற்றும் மலர்ப் பொய்கையாகவும், கண்ட அடிகள், அத்திருவடி நீழலை இளவேனிலாகவும் கண்டார். வெறும் இளவேனிலாக அவ் அறிஞர் காணவில்லை. வீங்கு இளவேனிலாகக் கண்டார்.

*''மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்*
*மூசு வண்டுஅறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே''*

ஈசன் எந்தையின் இணையடி நீழலை, இறைவன் அடியாருள் தலைசிறந்த அடியார், கார்காலமாகக் கண்டாரல்லர்; பனிக் காலமாகக் கண்டாரல்லர்; பிற காலங்களாகக் கண்டாரல்லர்; அவர் கண்ட காலம் இளவேனில்.

# கம்பராமாயணத்தில் நகைச்சுவை

வீரச் சுவையைக் கம்பீரமாக வாரிச் சொரியும் கம்பர் - காதற் சுவையைத் தீதின்றிக் கனிந்து கொட்டும் கம்பர் - கொஞ்சம் வில்லையும் அம்புகளையும் கீழே வைத்து விட்டு, காதலுக்கும் சிறிது ஓய்வு கொடுத்துவிட்டு, விளையாடப் புறப்பட்டு விடுகிருர். எவ்வளவு துன்பமான காலத்திலும் மனிதர்க்கு ஆறுதல் அளிப்பது விளையாட்டு. நகைச்சுவையை நாம் நன்ருக நுகருமாறு விளையாடுகின்ருர் கம்பர், தமது காவியமாகிய இராமாயணத்தில். நகைச்சுவையை முதல்தரமாக - உயர்ந்த முறையில் கையாள்கின்ருர் கம்பர். நகைச்சுவையை அனுபவித்து அறியமாட்டாத மக்கள், தம் வாழ்க்கையில் இன்பம் காணமாட்டார். கம்பர், தம்மை அணுகிய எவரையும் சிரித்துக் களிக்க வைப்பதில் இணையற்று விளங்குகிருர். கம்பர் தமது காவியத்தில் ஆங்காங்கு நகைச்சுவையை அமைத்திருக்கின்ருர். என்ருலும், நகைச்சுவையில் நம்மை அவர் முழுதும் இழுத்த இடம், காட்டில் வாழ்ந்த இராமனைச் சூர்ப்பணகை சந்தித்த கட்டம். அரக்கியின் தகாத ஆசையை இராமன் நகையாடி வெல்ல முயல்கின்ருன்.

சூர்ப்பணகை அக்காட்டில் திரிபவள். அவள் இராவணன் தங்கை அவள் கண்கள் காட்டில் வாழ்ந்த இராமனைப் பார்த்து விட்டன. அவன் வடிவழகில் வைத்த கண்களை எடுக்க அவளால் முடியவில்லை. அவன் திருமேனியழகை முழுதும் பருகிக் களித்துத் திளைக்க அவள் கருதிவிட்டாள். அது கிட்டாததொன்று

என அவளால் எண்ண முடியவில்லை. அவளுக்கும் அவனுக்கும் அழகில், அறிவில், உருவத்தில், பருவத்தில், குணத்தில் பிறவற்றில் உள்ள பொருத்தம் எவ்வளவு என்பதை ஆராயவே அவளுக்குத் தோன்ற வில்லை. கண்டாள்; காதல் கொண்டாள். அவ்வளவுதான். காதல் என்ருல் சாதாரணமான காதலல்ல; பெருங் காதல். ஆம். மனிதக் காதலல்ல; இராட்சதக் காத லல்லவா? தன் ஆசையை நிறைவேற்ற வழி என்ன என ஆராய்ந்தாள் சூர்ப்பணகை. தன்னைக்கண்டு அவன் மயங்கினுல் அன்றிக் காரியம் நிறைவேருதென நினைந் தாள். தன்னுடைய இராட்சதத் திருவுருவம் இராமன் கண்களில் பட்டுவிட்டால் என்ன ஆகும்? சூர்ப்ப ணகையை மனிதன் எவனுவது விரும்புவானு? அது அவளுக்கே தெரியும்.

அரக்கர் என்ருல் எப்படியிருப்பர் என்பதை நாம் அறிவோமல்லவா? தடித்த உருவம்; பனைமரம் போன்ற கை கால்கள்; வளைந்த கோரப்பற்கள்; யானைக் காது போன்ற காதுகள; செம்பட்டைமயிர்; எண்ணெய் உண்ட இருட்டின் நிறம்; மலைக்குகை போன்ற வாய்; இன்னபிற. இத்தகைய சூர்ப்பணகையை இராமன் திரும்பிப் பார்ப்பானு? இது தெரியாதா அவளுக்கு? முதலில் உருவத்தை மாற்றிக் கொண்டாள் சூர்ப்பணகை. அது அவளால் எப்படி முடிந்ததென்று என்னைக் கேட்கக்கூடாது கம்பர் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். நல்ல வடிவழகி ஆனுள் சூர்ப்பணகை. சூர்ப்பணகை என்ற பெயரையே மாற்றிக் காமவல்லி என்ற பெயரை வைத்துக்கொண்டாள். இராமனுக்கு முன்னுல் காட்சியளிக்கின்ருள். எப்படி? பாட்டைப் பருகுங்கள். நீங்களும் காமவல்லியை இப்போது கண்ணுல் பார்த்துவிடலாம்.

"அஞ்சொல்இள மஞ்ஞையென, அன்னமென, மின்னும்
வஞ்சியென, நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள்."

"தேனின்மொழி யுற்று,இனிய செவ்விநனி பெற்று,ஓர்
மானின்விழி பெற்று,மயில் வந்ததுஎன வந்தாள்."

இப்படி அவள் நடந்தருளிய தன்மையை இராமனுக்கு அறிவுறுத்தியது எது? அவள் அணிந்திருந்த சிலம்பும், அன்னாள் மேகலை மணியும், அக்காமவல்லியின் கூந்தல் மலரில் மொய்த்துக்கிடக்கும் வண்டுகளும் கத்துகின்ற சத்தம் ஒரு பெண்ணினது வரவை அறிவிக்க, இராமன் ஓசை வரும்திசையைப் பார்த்து விழித்தான்.

"நூபுரமும் மேகலையும் நூலும்அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும்இவை பூசலிடும் ஓசை
தாமுரைசெய் கின்றது,ஒரு தையல்வரும் என்னாக்
கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான்."

காமவல்லியின் கட்டழகு இராமனைக்கூட மயக்கி விட்டது. இவளுக்கு இணையான பெண் இப் பூவுலகிலேயே இல்லையெனக் கருதிவிட்டான் இராமன். "நேரிழையர் யாவர் இவர் நேர் என நினைந்தான்" என்று கூறுகின்றார் கம்பர். இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்தாள் காமவல்லி? தன் கண்ணாகிய வேலாயுதத்தை இராமன்மீது வீசினாள். அவனைப் பார்க்காததுபோல் பக்கத்தே பார்வையைச் செலுத்தினாள். மானைப்போல நாணி, கோணி ஒருபுறமாக ஒதுங்கி நின்றாள்.

"வெவ்விய நெடுங்கண்அயில் வீசிஅயல் பாரா
நவ்வியின் ஒதுங்கிஇறை நாணிஅயல் நின்றாள்"

உடனே அவ் அணங்கிற்கு ஒரு நல்ல வரவேற்பு அளிக்கின்றான் இராமன். 'உங்கள் வரவு நல்வர

வாகட்டும். நீங்கள் ஈண்டு எழுந்தருளப்பெற்றது எங்கள் புண்ணியம்.'

*"தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்*
*போதவுளது எம்உழையோர் புண்ணியம தன்றோ?"*

இப்படி வரவேற்ற இராமன், 'தங்களுடைய ஊர் என்ன? பேர் என்ன? உறவு என்ன?' என்று கேள்விகளை அடுக்குகின்றான். "ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு? என்றான்." அப்படிக்கேட்டவன் யார்? "வேதமுதல்" வேதங்களின் ஆணிவேர். "பேதையவள் தன்னிலை விரிப்பாள்" எதிரில் நின்ற பேதை, தன் நிலையை விரித்துக் கூறுகின்றாள். தன்பெருமையைப் பலபடவிரித்து விளக்கிச் சொல்கின்றாள் காமவல்லியாகிய சூர்ப்பணகை. 'படைப்புக் கடவுளாகிய பிர்ம தேவனின் மகனுக்கு மைந்தனுக்கு மகள் நான். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் நண்பனான குபேரன் என் தமையன். திக்கு யானைகளை எல்லாம் தொலைத்து இறைவன் வாழும் கயிலைமலையைக் கையில் எடுத்து உலக மூன்றையும் அரசு செலுத்தும் இராவணன் என்னுடைய மற்றொரு அண்ணன். என்பெயர் காமவல்லி. எனக்கு இன்னும் கலியாணமாகவில்லை. நான் கன்னி' என்று தன் வரலாற்றை உரைக்கின்றாள் அப்பெண்.

*"பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்விமுப்*
*புரங்கள் செற்ற*
*சேவலோன் துணைவனான செங்கையோன்*
*தங்கை, திக்கின்*
*மாவெலாம் தொலைத்து, வெள்ளி மலையெடுத்து,*
*உலக மூன்றும்*
*காவலோன் பின்னை, காம வல்லியாம்*
*கன்னி யென்றாள்."*

இராமன் கேட்கிறுன் :

' அப்படியா? இராவணன் தங்கையென்பது உண்மை யாளுல் இந்த உருவை-இப்பொழுது தாங்கள் அடைந் திருக்கின்ற மனித உருவை எப்படிப் பெற்றீர்கள் ? அரக்கர் உருவல்லவா உங்கட்குச் சொந்தமானது ?, 'ஆம் ; உண்மைதான். அரக்கர் குலத்தில் பிறந்தேனு யினும் அவர்கள் செய்கை ஒன்றும் எனக்குப் பிடிப்ப தில்லே. ஆதலால் தேவர்களே நோக்கித் தவஞ்செய்து இந்த வடிவத்தை நான் பெற்றுக்கொண்டேன்' என்ருள் அரக்கி.

' சரி, இருக்கட்டும்.'

'' இமையவர் தலேவ னேயும்
எளிமையின் ஏவல் செய்யும்
அமைதியின் உலகம் மூன்றும்
ஆள்பவன் தங்கை யாயின்
சுமையுறு செல்வத் தோடும்
தோன்றலே துணேயொன் றின்றித்
தமியைநீ வருதற் கொத்த
தன்மையென் தையல்,என்ருன்.''

'இந்திரனேயும் எளிதில் ஏவல்கொண்டு அமைதியாக மூன்று உலகங்களேயும் ஆள்கின்ற இராவணன் தங்கை அதற்கேற்ற செல்வச் சிறப்பு ஏதுமின்றி, ஒரு துணே கூட இல்லாமல் தனிமையாக வருவானேன்?' என்ருன் இராமன். 'தங்களிடத்தில் ஒருகாரியம் இருக்கிறது ; அது தனிமையாகக் காணவேண்டிய காரியம்' என்ருள் அணங்கு.

'ஒஹோ, என்ன காரியம் அது ? சொல் ; முடியு மாளுல் செய்கிறேன்,' "என்ன காரியத்தை சொல், அஃதியலுமேல் இழைப்பல்" என்ருன் இராமன்.

*"ஏமுறும் உயிர்க்கு நோவேன் என்செய்கேன்*
*யாரு மில்லேன்*
*காமனென்று ஒருவன் செய்யும் வன்மையைக்*
*காத்தி என்ருள்,"*

காமவல்லி. இராமன் பார்த்தான். 'என்ன விந்தை யிது? ஒரு பெண் இக் காட்டில் தனியாக வந்து நாணத்தை அறவே விடுத்து இத்தகைய மொழி பகர் கின்ருள். இன்னும் பார்க்கலாம். இவள் செய்கையை மேலும் ஆராயவேண்டும்' என்று கருதுகின்ருன். 'நல்லது. நீ சொல்லுவது பொருத்த மாக இல்லையே. நீயோ பிராமணப்பெண். நான் ராஜகுலம். எப்படிப் பொருந்தும்? அது மரபல்லவே.'

*"சுந்தரி மரபிற் கொத்த*
*தொன்மையின் துணிவுஇற் றன்ருல்*
*அந்தணர் பாவை நீ,யான்*
*அரசரில் வந்தேன் என்ருன்."*

இராமன் இவ்வாறு மொழிந்தவுடன் சூர்ப்பணகை இராமனை வாதத்தில் மடக்கி விடுகிருள். இங்கு பெரிய சீர்திருத்தக்காரியாகி விடுகிருள் அவள். ஜாதிக்கும் மணத்திற்கும் சம்பந்தம் இல்லையென்று காட்டுகின்ருள் சூர்ப்பணகை. இதை ஒரு காரணமாகச் சொல்லி என்னைத் தள்ளுவாயானுல் நான் விடமாட்டேன். இப் பொழுதே உன் காலடியிலேயே என் உயிரை விட்டுவிடுவேன்.'

*"இகழ்தற்கொத்த காரணம் இதுவேயாகில்*
*என்னுயிர் காண்பன் என்ருள்."*

இராமனுல் அவளின் இக்கூற்றை மறுக்க முடிய வில்லை. 'சரி, அஃது இருக்கட்டும்; அரக்கர் தம்மில் மானுடர் மணத்தல் பொருத்தமன்று என்று அறிஞர்

புகல்கின்றனரே' என்றான் அவன். பேசுகின்றாள் சூர்ப்பணகை. 'நீங்கள். இப்படியெல்லாம் கூறி மறுக்கக்கூடாது. நான் அரக்கர் கூட்டத்தினின்றும் விடுபட்டுவிட்டேன். அந்தப் பழிபடு பிறவி எனக்குப்போய் விட்டது. இப்போது நான் மானுடப்பெண்ணாக விளங்குவதை நீங்கள் கண்ணாரக் காணவில்லையா?' என்று போட்டாள் ஒருபோடு.

இராமன் சொல்கின்றான்: 'சரி, அப்படியானால் ஒரேயொரு ஆட்சேபம். நீ சாதாரணமான ஒரு அநாதையல்ல; உன்னுடைய சகோதரர்களில் ஒருவனே மூன்று உலகங்கட்கும் தலைவன்; மற்றொருவனே செல்வச்சீமான் குபேரன்; இவ்விருவரும் அறியாமல் உன்னை நான் மணத்தல் தகாது: அன்னார் உன்னை எனக்கு ஈந்தால் ஏற்றுக்கொள்வேன்.'

"ஒருவனே உலகமூன்றிற்
கோங்கொரு தலைவன், ஊங்கில்
ஒருவனே குபேரன்நின்னோடு
உடன்பிறந் தவர்கள்அன்னார்
தருவரேல் கோடும்"

என்றியம்பினான் சீதையின் கேள்வன். 'அவர்கட்கு இது விருப்பந்தான். அவர்கள் மறுக்கப் போவதில்லை. ஆனால், அதற்காக நாம் காத்திருக்க வேண்டாம். காலத்தை ஏன் வீணாக்கவேண்டும்? கந்தர்வ மணமுறை இல்லையா? அம்முறையில் நாம் கலப்போம். நீ என்னை ஏற்றுக்கொண்டால் உனக்கு நிறைந்த நன்மையுண்டு. தேவர்களை அடக்கியாளும் அரக்கர் எல்லாம் நினக்கு ஏவல்செய்து நிற்பர்' என்று சாற்றினாள் அரக்கர்கோன் தங்கை.

'நான் பாக்கியசாலிதான். நகர் நீங்கிய பின்னரே நான் செய்த தவம் பலித்தது. அரக்கர் கருணைக்கு

இலக்கானேன். பேரழகியான உன்னை அடையவும் பெற்றேன்' என்று சொல்லி, பற்கள் வெளித் தோன்றக் கலகலவெனச் சிரித்துவிட்டான் தயரதன் தோன்றல்.

"நிருதர்தம் அருளும் பெற்றேன்,
நின்னலம் பெற்றேன், நின்னோடு
ஒருவரும் செல்வத்து யாண்டும்
உறையவும் பெற்றேன், ஒன்றோ
திருநகர்த் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்னா
வரிசிலை வடித்த தோளான்
வாளெயிறு இலங்க நக்கான்."

இராமன் சிரித்த இந்தச் சந்தர்ப்பத்தில், மற்றொரு காட்சி நடக்கின்றது. ஒரு புதிய தோற்றம்! உள்ளே இருந்து ஒரு மின்னல் பளிச்சென்று வீசுகின்றது! அவள் தோன்றுகின்றாள்! யார்? ஜானகி.

"விண்ணிடை இம்பர் நாகர்
விரிஞ்சனே முதலோர்க் கெல்லாம்
கண்ணிடை ஒளியின் பாங்கர்க்
கடிகமழ்ச் சாலை நின்றும்
பெண்ணிடை யரசி தேவர்
பெற்றநல் வரத்தால் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த
வஞ்சியே போல்வாள் வந்தாள்!"

இதுவரை யாரோ ஒரு மனிதன் தனியாகக் காட்டி லிருக்கிறான் என்று கருதிக்கொண்டிருந்த சூர்ப்பணகை "அரக்கர் என்னும் கான்சுட முளைத்த கற்பின் கனலி யைக் கண்ணிற் கண்டாள்" அவள் அழகில் சொக்கி விடுகிறாள் சூர்ப்பணகை. 'இவளைப் பார்த்த கண்ணால் வேறு எதையும் பார்க்க முடியாது போலிருக்கிறதே'

யென்கின்ருள், 'பெண்ணுகப் பிறந்த என் கதி இதுவா ஞல் மற்றவர் என்னுவர்' என்று நினைக்கின்ருள். "கண் பிற பொருளிற் செல்லா கருத்தெனின் அஃதே, கண்ட பெண் பிறந்தேனுக்கென்ருல் என்படும் பிறருக்கு என்ருள்."

அவளை ஒரு பார்வை பார்த்தாள்; அவனை ஒரு பார்வை பார்த்தாள். 'இரு திறத்தார்க்கும் செய்த வரம்பு இவர் இருவர்' என்ருள். சட்டென்று ஒரு நினைவு வந்தது. இப்போது செய்யவேண்டுவதென்ன என்று யோசித்தாள். 'நம்மைப்போலவே இவளும் எங்கிருந் தாவது வந்தவளாகவே இருக்கவேண்டும்' எனத் தீர்மானித்தாள் . சொல்லுகின்ருள் இராமனைப்பார்த்து. யார்? சூர்ப்பணகை. யாரைப்பற்றி? அவன் காதலியாகிய சீதையைக் குறித்து :

"வரும்இவள் மாயம் வல்ல
வஞ்சனை அரக்கி நெஞ்சம்
தெரிவிலள் தேறுந் தன்மை
சீரியோய் செயலிற்று அன்ருல்
உருவிது மெய்ய தன்று
ஊன்நுகர் வாழ்க்கை யாளை
வெருவினன், எய்தி டாமல்
விலக்குதி வீர என்ருள்."

'ஏ வீரா! இதோவருகின்ற இவள் மாயம் வல்லவள்; வஞ்சனை அரக்கி; இந்த உருவம் உண்மையானதன்று; இது மாயவேடம்; இவள் ஊன் தின்பவள்; இவளைக்காண எனக்குப்பயமாக இருக்கிறது; இவளை இங்கு வராமல் தடுப்பாயாக' என்ருள் மாறுவேடம் பூண்ட அரக்கி. இது கேட்ட இராமன், முன்னையைவிட அதிகமாக மட மட வென்று நகைத்தான். 'ஆஹா! எப்படிக் கண்டு பிடித்து விட்டாய்! உன் நிலைமை இப்போதுதான்

நன்ருக விளங்குகிறது' என்று கூறினன். சீதைமீது பாய்வாள்போல், 'அடி அரக்கி, நீ எங்கே இவ்வமயம் வந்து தோன்றிஞய் இடையூருக' என்று உறுமினுள் மாய வல்லரக்கி.

சீதைக்கு ஒன்றுமே புரியவில்லே. இந்தப் பெரிய குழப்பத்தைக் கண்டு நடுநடுங்கிப்போய் விரைந்து ஓடி, "குஞ்சர மனைய வீரன் குவவுத்தோள் தழுவிக்கொண் டாள்," இனி அரக்கியோடு விளையாடுவது விபரீதமாக முடியலாம் என்று எண்ணுகின்ருன் இராமன். 'ஏ பெண்ணே, இனி இங்கு நிற்காதே. உன் நிலைமையை அறிந்தால் என்தம்பி கோபிப்பான். விரைவில் போய் விடு' என்று சொல்லிவிட்டு இராமன் சீதையோடு உள்ளே சென்றுவிட்டான்.

அரக்கி, துயரத்தோடு ஆராய்ச்சியில் ஆழ்ந்தாள். அவனுடன் இருக்கும் பெண்ணைத் தொலைக்கும்வரை அவன் தன்னை விரும்பமாட்டான் என்று நினைத்தாள். அவளைத் தூக்கிச்செல்லச் சமயம் பார்த்தாள். சீதை ஒருசமயம் தனியே இருப்பதாக நினைந்து, அவளைத் தூக்க முயன்ருள். கண்டான் இலக்குமணன். 'நில்லடி' எனக் கடுகினன்; கூந்தலைப் பிடித்துக் கொண்டான்.

*"மூக்கும் காதும்வெம் முரண்முலைத் தடங்களும் முறையால்*
*போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்."*

ஆ! என்று அலறினுள் அரக்கி, முழைவாயைத் திறந்து:

*"மலையெடுத்த தனிமலையே!*
*இவைகாண வாராயோ!"*

*"வலியானே! யான்பட்ட*
*வலிகாண வாராயோ!"*

*"அரனிருந்த மலையெடுத்த*
*அண்ணுவோ! அண்ணுவோ!"*

"இசையாலே நிறைந்தபுயத்து
இராவணவோ! இராவணவோ!"

"வானவரைப் பணிகொண்ட
மருகாவோ! மருகாவோ!"

"கொல்லீரும் படைக்கும்ப
கருணனைப்போல் குவலயத்தில்
எல்லீரும் உறங்குதிரோ!
யானழைத்தல் கேளீரோ!"

என்று கதறினாள், இராமன் தம்பியின் வாளால் மூக்கு முதலியன அறுபட்ட இராவணன் தங்கை. இவ்வாறு அரக்கி பூமியில் புரண்டு ஓலமிடுகின்றபோது,

"நின்றுஅந்த நதியகத்து
நிறைதவத்தின் குறைமுடித்து
வன்திண்கைச் சிலைநெடுந்தோள்
மரகதத்தின் மலைவந்தான்."

வந்த இராமனை வழிமறித்து, அவன் அடியிலே வீழ்ந்தாள் மாய மாது. "அந்தோ உன் திருமேனிக்கு அன்பு இழைத்த வன்பிழையால், எந்தாய் யான்பட்டபடி இதுகாண் என்று எதிர்விழுந்தாள்." 'நான் செய்த குற்றம் எதுவுமில்லை; உன் மேனியில் அன்பு செலுத்தினேன். இக்குற்றத்திற்கு எனக்குக் கிடைத்த தண்டனை இது' என்று வருந்திக் கூறினாள்.

'நீங்கள் யார்?' என்றான் இராகவன்.

"அவ்வுரைகேட்டு அடல்அரக்கி
அறியாயோ நீஎன்னைத்
தெவ்வுரையென்று ஒருலகும்
இல்லாத சீற்றத்தான்
வெவ்இலைவேல் இராவணனும்
விண்ணுலகம் முதலாக

*எவ்வுலகும் உடையானுக்கு*
*உடன்பிறந்தேன் யான்என்றாள்."*

'சரிதான். அவ்வளவு சிறப்புடைய நீங்கள் இங்கு வந்த காரணம் என்ன' என வினவினான். 'என்ன, இப்படிக் கேட்கலாமா? என்னையும் என் நிலைமையையும் நீங்கள் அறிய மாட்டீர்களா? நேற்று வரவில்லையா நான்

*"வேம்இருந்தை எனக்கனலும்*
*வெங்காம வெம்பிணிக்கு*
*மாமருந்தே! நெருநலினும்*
*வந்திலனோ யான்என்றாள்."*

'நேற்றுப் பேரழகோடு காணப்பட்டவர்கள் நீங்களா?'

*"செங்கயல்போல் கருநெடுங்கண்*
*தேமருதா மரையுறையும்*
*நங்கையிவர் எனநெருநல்*
*நடந்தவரோ நீர்?"*

என்று கேட்டான்.

*"கொங்கைகளும், குழைக்காதும்*
*கொடிமூக்கும் குறைத்துஅழித்தால்*
*அங்கண்அரசே!ஒருவர்க்கு*
*அழியாதோ அழகு?"*

என்றாள். இந்த நிலைமையில் மூக்கு இழந்த மூன்றுலகுடையவன் தங்கை, மேலும் பேசுகின்றாள், ஆசையை விடாமல்:

சீதை இருக்கட்டும்; என்னையும் வைத்துக்கொள்ளுங்கள். இரண்டு ஒரு அதிகமா? "காம்பறியுந் தோளாளைக் கைவிடீர் எனினும் யான் மிகையோ" என்று நயந்து கேட்கின்றாள். 'மூக்கு நீட்டிக்கொண்டிருப்பது அநாவசியம் என்று கருதித்தான் நீங்கள் இப்படிச் செய்திருக்கின்றீர்கள்'

"மேக்குயரும் நெடுமூக்கு மடந்தையர்க்கு
மிகையன்றே?"

'அது மட்டுமா?'

"பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண
மூக்குஅரிவான் பொருள்வேறு உண்டோ?
இன்னுருவம் இதுகொண்டுஇங்கு இருந்தொழியும்
நம்மருங்கே, ஏகாள் அப்பால்,
பின்இவளை அயல்ஒருவர் பாராரென்றே
அரிந்தீர் பிழைசெய் தீரோ?
அன்னதனை அறிந்தன்றே அன்பிரட்டி
பூண்டதுநான் அறிவி லேனே."

'நீங்கள் சரியான ஆட்கள். வேண்டுமென்று என் மீது கொண்ட அன்பு காரணமாகத்தான் இப்படிச் செய்திருக்கிறீர்கள். மூக்கு முதலியவற்றை அறுத்துவிட்டால் இவள் வேறு எங்கும் நம்மைவிட்டுப் போகமாட்டாள். இவள் காரணமாக மற்றவர்களால் ஏற்படும் சிரமமும் குறையும் என்றுதான் கொய்தீர்கள். எனக்கு இதுதெரியாதா? நான் அறிவில்லாதவளா? இதை உணர்ந்தே நான் முன்னிலும் அதிகமாக உங்களிடம் அன்பு செலுத்துகின்றேன்' என்று மூக்கு அறுபட்ட பின்னும் ஆசையை விடாமல், சாதுர்யமாக நயந்து சூர்ப்பணகையாக இருந்து கம்பர் பேசுவது எல்லாவற்றிலும் பெரிய நகைச்சுவை கொண்டது.

# திருமங்கை ஆழ்வார்

திருமங்கை ஆழ்வார், ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர். ஆழ்வார் என்ற சொல்லுக்கு, அமிழ்ந்துவார் என்பது பொருள். திருமாலின் அருளிலே அமிழ்ந்திப் பதிந்து விட்டவர் ஆழ்வார். பன்னிரண்டு ஆழ்வாருள் இறை திருமாலைப் பாடியவர் பதினொருவர்; இப்பதினொரு வருள் ஒருவராகிய நம்மாழ்வாரைப் பாடினவர் மதுர கவி ஆழ்வார் என்பார். இப்பன்னிருவருள் ஆண்டாள் ஒருவரே பெண்.

பன்னிரண்டு ஆழ்வாரும் பாடிய பாசுரங்களின் மொத்த எண் சரியாக நாலாயிரம். பாக்களைக் கணக் கிடுவதில் மாறுபட்டுச் சிறிது குறைத்துக்கூறுவர் சிலர். ஆழ்வார்கள் பாடல் தொகுதிக்கு 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்று பெயர். பன்னிருவர் பாடிய பாக்கள் நாலாயிரத்துள், மிகுதியான பாக்கள் பாடிய ஆழ்வார் இருவர். ஒருவர் நம்மாழ்வார், இன்னொருவர் திருமங்கை ஆழ்வார். நம்மாழ்வார் 1296 பாக்கள் பாடினார். திருமங்கை ஆழ்வார் 1361 பாக்கள் பாடினார். இவ்விருவருள்ளும் அதிக எண்ணிக்கை திருமங்கையா ருடையதே. அதிகம் என்பதற்காகமட்டும் ஒரு சிறப் பில்லை திருமங்கையாழ்வார் வாக்கு, தேனிலும் இனியது. திருமங்கையார் பாசுரங்களைப் பயிலும்போது, நாவில் அமிழ்தம் ஊறித் ததும்பும். அப்பெரியார் நிரம்பிய புலமையுடையார் என்பது அவர் பாக்களினின்றும் தெரி கின்றது. திருமங்கை மன்னன் பாக்கள், வழுவிலாத–

மாசுமருவற்ற மாணிக்கங்கள். திருமங்கைஆழ்வார், கலி 399-ஆவது ஆண்டில் பிறந்தார் என்று அவர் சரித்திரக் குறிப்பில் காணப்படுகின்றது. அது எவ்வளவுதூரம் உண்மை யென்று நமக்குத் தெரியாது. சரித்திர ஆசிரியர்கள் திருமங்கையாழ்வார் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்திருக்கவேண்டும் என்று கருதுவதாகத் தெரிகிறது.

அவர் எக்காலத்தவராஞல் என் ? காலத்தைப்பற்றி நாம் கவலேப்படவேண்டாம். அது முடிவுக்கு வரமுடியாதது. அவர்சரித்திரத்திலும் நான் நுழையப்போவதில்லே. உண்மையாக நம்பத்தக்க சான்றுடன் சரித்திரக்குறிப்பு எதுவும் கிடைக்கவில்லே. தவிர, திருமங்கையாழ்வார் போன்ற அடியார்களே நாம் அறிந்துகொள்ள, தலேகால் புரியாத சரித்திரச் சுழலிலே அகப்பட்டுத் தவிக்க வேண்டிய அவசியம் இல்லே. திருமங்கையாழ்வாரை நாம் அறிய, அவர் பாடியருளிய பாத் தொகுதியாகிய பொக்கிஷமே போதிய கருவி. அவ் விரத்தினக் குவியலுள் நுழைவோம்.

திருமங்கையாழ்வார் பாசுரங்களில் பக்திச் சுவை வார்ந்து வழிந்து பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆஞல் அது வெறும் பக்தியாக மட்டும் இல்லாமல், காதல் சுவையோடு பின்னிக் கலந்து பாய்கின்றது. ஆழ்வார் நம்மைப் பக்திக்கு இழுத்துச் செல்லும்போது, இயற்கை வழியாக நுழைந்து, அவ் அழகில் நம்மை முழுதும் மெய்மறந்துவிடச் செய்கின்ருர்.

*" வஞ்சனேயால் வந்தவள்தன் உயிருண்டு, வாய்த்த*
*தயிருண்டு, வெண்ணெயமு துண்டு வலிமிக்க*
*கஞ்சனுயி ரதுஉண்டுஇவ் உலகுண்ட காளே."*

திருமால் உணவு செய்தருளிய பொருள்கள் இங்கு அடுக்கப்பெறுகின்றன. வஞ்சனேயாகி வந்தவள் உயிரை

உண்டான் ; தயிரை, வெண்ணெயை உண்டான் ; வன்மைமிக்க கஞ்சனுயிரையும் உண்டான் ; இவ்வுல கத்தையே உண்டான் ; மெல்லியவற்றையும் விழுங்கு வான் ; கொடியவற்றையும் விழுங்கிவிடுவான். இது பாசுரத்தின் முற்பகுதி. அவன்இருக்கும் இடம் எது? பாசுரத்தின் பிற்பகுதியைக் கவனியுங்கள்.

இயற்கையின் ஓட்டம் :

*'' கருதுமிடம்; காவிரி,சந் தகில்கனக முந்தி*
*மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து*
*வளங்கொடுப்ப, மாமறையோர் மாமலர்கள் தூவி*
*அஞ்சலித்தங் கரிசரணென் றிறைஞ்சுமணி நாங்கூர்*
*அரிமேய விண்ணகரம், வணங்குமட நெஞ்சே.''*

பக்தியோடு வீரம் செறிந்த பாக்கள் பல :

*'' பந்தணைந்த மெல்விரலாள் சீதைக் காகிப்*
*பகலவன்மீ தியங்காத இலங்கை வேந்தன்*
*அந்தமில்திண் கரம்சிரங்கள் புரண்டு வீழ*
*அடுகணையால் எய்துகந்த வம்மான் காண்மின்.''*

இப்பாட்டைப் படிக்குங்கால், சீதையின் பொருட்டு, சூரியன் வர அஞ்சும் இலங்கை நகரின் காவலின் வலிய கைகளாகிய காடு சடசடவென முறிந்து விழும் இரைச்சல் நம் காதுகளில் விழுகின்றது ; அவ் இரா வணனின் தலை வரிசைகள் புரண்டு சரிவதை நம் கண்கள் பார்க்கின்றன.

*'' மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும்*
*மற்றவர்தம் காதலிமார் குழையும் தந்தை*
*கால்தளையு முடன்கழல வந்து தோன்றிக்*
*கதநாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர்.''*

எதிர்ந்தவர்களுடைய கிரீடங்கள், அவர்கள் வலிமை, அன்னார் கீர்த்தி இவ்வளவும் அவை இருக்கவேண்டிய

இடத்தைவிட்டுக் கழன்றுவிடுகின்றன ; அவைமட்டுமா? அவர்தம் காதலியர் அணிகளும் உதிர்கின்றன ; தந்தை காலில் பூட்டப்பட்ட அடிமை விலங்கும் அறுபட்டுக் கொட்டுகின்றது.

இரணியன் வதைப்படலத்தில் கம்பர்தாமே நரசிம்ம மூர்த்தியாகிவிட்டதுபோல, திருமங்கையாழ்வாரும் இரணியனை நினைத்தவுடன் நரசிங்கமாகவே காட்சியளிக்கின்றார்.

"பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்ப,
பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே."

அந்தப் பிறையெயிற்று - அனல்விழி - பேழ்வாய்- தெள்ளிய சிங்கத்தையே, இங்கு நாம் காண்கின்றோமல்லவா ?

ஊனினால் சுவரை வைத்து, எலும்புகளைத் தூணாக அமைத்து, உரோமத்தால் மேற்கூரை போட்டு, ஒன்பது பாதைகள் வைக்கப்பட்டது உடம்பு என்னும் வீடு. அக்குரம்பையை விட்டு உயிர் ஆகிய பறவை ஓட நேரும் போது நீயன்றி வேறு துணையில்லை என்று கூறும் அரிய பாசுரத்தைப் பாருங்கள் :

"ஊனிடைச் சுவர்வைத் தென்புதூண் நாட்டி
உரோமம்வேய்ந்து, ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போது உன்றன்
சரணமே சரணமென் றிருந்தேன் ;
தேனுடைக் கமலத் திருவினுக் கரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய் !
நானுடைத் தவத்தால் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்!"

பிறனில் விழைதலைப் பயங்கரமான தோற்றம் உண்டாகும்படி எடுத்துக்காட்டிக் கண்டிக்கிறார் ஆழ்வார். இவ்

வளவு ஆணித்தரமாக இதனைக் கூறுவதினின்றும் இதன் கொடுமையை ஆழமாக உணர்கின்றார் மங்கை மன்னர் என்பது தெளிவாகின்றது. 'அடே, பிறன்மனை நயக்கும் பாவி! உன்னை எமதூதர் கொணர்ந்து பழுக்கக் காய்ச்சிய செப்புப் பாவையைக் கட்டியணைக்கச் சொல்லும்போது என்னடா செய்வாய்?

*"வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து,*
*பிறர்பொருள் தாரமென் றிவற்றை*
*நம்பினா ரிறந்தால், நமன்றமர் பற்றி*
*யேற்றி வைத்து, எரியெழு கின்ற*
*செம்பினா லியன்ற பாவையைப் பாவீ!*
*தழுவென மொழிவதற்கு அஞ்சி,*
*நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன்;*
*நைமிசா ரணியத்து ளெந்தாய்!"*

திருமால் இவ்வுலகத்தை என்ன பாடுபடுத்துகிறான் என்பதைப் பாருங்கள்:

*"பாராளன், பாரிடந்து பாரை யுண்டு*
*பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்ட*
*பேராளன்."*

உலகத்தைப் பிளந்தான்; உலகத்தை உண்டான்; உலகத்தைக் கக்கினான்; உலகத்தை அளந்தான்; உலகத்தை ஆண்டான். நல்ல உலகம்! அவனிடம் அகப்பட்டுக்கொண்டது! இனி இவ்வுலகத்தை அவன் இவற்றிற்குமேல் என்னதாம் செய்ய முடியும்?

குகனைப் பார்த்து ராமன், "எம்பி உன் தம்பி, நான் தோழன், மங்கை கொழுந்தி" எனச் சொன்ன உயர் கொள்கையை நினைந்து நினைந்து உள்ளம் பூரிக்கின்றார் ஆழ்வார்;

*"ஏழை ஏதலன் கீழ்மக னென்னா*
*திரங்கி மற்றவருக்கு இன்னருள் சுரந்து*

*மாழை மான்மட நோக்கியுன் தோழி*
*யும்பி யெம்பியென் ருெழிந்திலை உகந்து*
*தோழன் நீயெனக் கிங்கொழி யென்ற*
*சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட*
*ஆழி வண்ண! நின் னடியிணை யடைந்தேன்*
*அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே.''*

பிற பெரியார் மொழித்தொடர்களோடு ஒத்த திரு மங்கையார் வாக்குச் சிலவற்றை இங்குக் காண்போம். “என்னுைய் என்னுைய் என்னினல்லான்” என்ற சொற்ருெடர், அப்படியே நாவரசர், மங்கைமன்னர் ஆகிய இருவர் திருவாயினின்றும் புறப்பட்டிருக்கின்றது. “நெருநலையாய் இன்ருகி நாளையாகி” என்று சிவனைப் பாடுகின்ருர் அப்பர்; “நென்னலை-இன்றினை நாளையை” என்று மாலை ஏத்துகின்ருர் மங்கையார். “கொல்லை முல்லை மெல்லரும்பு ஈனும் குற்ருலம்” என்று கூறு கின்ருர் திருஞானசம்பந்தர்; “கொல்லை முல்லை மெல் லரும்பு ஈனும் குருங்குடியே” என உரைக்கின்ருர் திருமங்கையாழ்வார். “கடலன்ன காமம்” என்றியம் பினுர் வள்ளுவனுர்; “காரார் கடல்போலும் காமத்த ராயினுர்” எனக் கழறுகின்ருர் மங்கையார். சிவபெரு மானைப் பற்றி, திருமங்கையாழ்வாரால் சில இடங்களில் குறைவாகக் கூறப்படுகின்றது. இவ்விதி, பண்டைக்கால இறைவன், அடியார் எவரையும் விட்டதாகத் தெரிய வில்லை அம்முறையைத் திருமங்கையாழ்வாரும் கடக்க வில்லை. என்ருலும் சமரசம் வாய்ந்த சிலபாடல்களையும், சிவனை உயர்த்தும் சிலபாடல்களையும் திருமங்கையாழ் வார் பாடியிருக்கின்ருர். “நீரகத்தாய், நெடுவரையின் உச்சிமேலாய், நிலாத்திங்கள் துண்டத் தாய்” என் றியம்பும் பாசுரத்தின் வரிகள் நயம்வாய்ந்தன. இங்கே சிவனும் திருமாலும் ஒன்ருகின்ருர். சிவபெருமானுக்குக் கோயில் எழுப்பிய கோச்செங்கட் சோழனைப் பாராட்டி,

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு
எழில்மாட மெழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன்"

என்று வாழ்த்துகின்றார் ஆழ்வார். மற்றோர் இடத்து நடராஜனின் ஊர்த்துவ ஆநந்தத் தாண்டவத்தைக் கண்டு ஆழ்வார் பாடும் அருமையைப் பாருங்கள்:

"மாதிரங்கள்,
மின்னி யெரிவீச மேலெடுத்த சூழ்கழற்கால்
பொன்னுலக மேழும் கடந்தும்பர் மேல்சிலும்ப
மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும்
பன்னி னுடனே சுழலச் சுழன்றாடும்
கொன்னவிலும் மூவிலைவேல் கூத்தன் பொடியாடி"

என்று கூறி மகிழ்கின்றார் ஆழ்வார்.

திருமங்கை மன்னர் காதற்சுவையைப்பற்றிக் கூறும் போது உலகத்தையே திகைக்க வைத்துவிடுவார்போல் காண்கிறது. காதலைப்பற்றி அவர் பாடிய தேன் ஒழுகும் பாக்கள் அனந்தம். ஆழ்வார் தம்மைப் பெண்ணாகவே நினைத்துத் திருமாலை மணாளனாகப் பெறப் பெருமுயற்சி செய்கின்றார். நாரையையும், கிளியையும், வண்டையும், பிறவற்றையும் தூது போக்குகின்றார். இறுதியில் மடல் ஏறக்கூடத் துணிந்துவிட்டார். பெண்கள் மடலேறுவது மரபு அன்று என்ற திருவள்ளுவர் கொள்கையை அஞ்சாது மீறுகின்றார் மங்கை மன்னர். பெண் மடலேறுவது நியாயம் என்பதற்கு அவர் காட்டும் சான்றுகள் சாதுர்யம் வாய்ந்தவை. திருமங்கையாழ்வார் சிறிய திருமடல்-பெரிய திருமடல் இரண்டும் இணையில்லாப் பாக்கள். காதல் துறையில் நற்றாய் இரங்கல் ஒன்று. மங்கையார் தாயாராக இருந்து தன் மகள் பொருட்டு இரங்கும் முறையில் பாடுகின்றார் பாசுரம்.

'ஐயோ ! என் மகளை இப்படிச் செய்து விட்டானே அவன் ; என் மகள் சந்தனத்தை அணிய மறுக்கிருள் : கண்ணிற்கு மை தீட்டுகின்ருள் இல்லையே ; அவள் அருமையாக வளர்த்த நாகணவாய்ப் புள்ளைக்கூட மறந்துவிட்டாளே ; எப்பொழுதும் திருவரங்கம் என்றே இயம்புகின்ருள்; நாம்அறிய இடையர்பாடியிலே வளர்ந்த அவன் இப்படியும் செய்வானே? அந்தோ, என்ன விபரீத மிது !'

"பூண்முலைமேல் சாந்தணியாள் பொருகயல்கண்
மையெழுதாள் பூவை பேணுள்
ஏணறியா ளெத்தனையும் எம்பெருமான்
திருவரங்கம் எங்கே என்னும்
நாள்மலராள் நாயகனுய் நாமறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி
ஆண்மகனு யென்மகளைச் செய்தனகள்
அம்மனேமீ ரறிகி லேனே."

மற்ருெரு தாயார் பாசுரம் :

'என் அருமை மகள், திருமாலின் புகழைத் தன் கிளிமொழியால் கூவிக்கூவி, வீணையைத் தாங்கித் தன் மெல்லிய விரல்களால் அவ்வீணையைத் தடவித் தடவி விரல் சிவந்து மெலிந்து விட்டாளே'

"சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகையிறையே தோன்ற நக்கு
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி யாங்கே
மென்கிளிபோல் மிகமிழற்று மென்பே தையே"

திருமங்கையார் தாம் ஒரு மங்கையாகவே இருந்து தூது விடுகின்ருர் நாரையை. 'நாராய், இன்றே நீ புறப்படுக. எங்கே? நேராகத் திருக்கண்ணபுரத்துக்கு ; என் செங்கண்மால் அங்கே யிருக்கின்ருன் ; என் காதலை

அவனுக்குச் சொல் ; உனக்கு நல்ல உணவு தருகிறேன்; நீ விரும்பும் உணவு! நல்ல வயல்மீன். நீயும் உன் மனேவியும் உண்டு சுகமாக வாழலாம்; நீ அப்படிச் செய்தால் அதுபோன்ற இன்பம் எனக்கு வேறு இல்லை"

"செங்கால மடநாரா யின்றே சென்று
திருக்கண்ண புரம்புக்கென் செங்கண் மாலுக்கு
என்காத லென் துணைவர்க் குரைத்தி யாகில்
இதுவொப்ப தெமக்கின்ப மில்லைநாளும்
பைங்கான மீதெல்லா முனதே யாகப்
பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன் தந்தால்
இங்கேவந் தினிதிருந்துன் பெடையும் நீயும்
இருநிலத்தி லினிதின்பம் எய்த லாமே."

மங்கையார் ஒரு வண்டைத் தூது போக்குகின்ருர் :

'ஏ வண்டே, நீ எப்போதும் உன் துணையைவிட்டுப் பிரியாது பூக்களைக் கலக்கித் தேன் குடிக்கிருயே. என் நிலைமையை என் துணைவனுக்குச் சொல்லமாட்டாயா?'

"தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரிய மதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரிவெஞ் சிலையானுக் கென்னிலைமை யுரையாயே."

தலைவி காணும் ஒரு நல்ல காட்சிச் சித்திரத்தை இங்கே காணுங்கள். ஒளி வீசுகின்ற உருவம் - பெரிய தோள்கள் - வீரக் கைகள் - அருள் ஒழுகும் கண்கள் - செய்ய வாய்-நறுந் துளபமாலை - குண்டலமணிந்த காதுகள். இத்தகைய ஒரு தோற்றம். அது என்ன செய்தது? மங்கையின் நலத்தையும்-அவர் நிறைவையும்-அவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டதுமல்லாமல், அன்னூர் கைவளைகளையும் பறித்துக்கொண்டு அவரை மயக்கிவிட்டு அது மறைந்துவிட்டது. அத்திரு

உருவம் போகும்போது தன்னுடைய ஊர் ‘ திருவரங்கம் ’ என்று ஒரேயொரு வார்த்தைதான் மொழிந்தது :

“ மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கு மகரம்சேர் குழையும் காட்டி
என்னலனு மென்னிறைவு மென்சிந்தையும்
என்வளையும் கொண்டென்னை யாளுங் கொண்டு
பொன்னலர்ந்த நறும்செருந்திப் பொழிலி னூடே
புனலரங்க மூரென்று போயி னாரே.”

மங்கை மன்னர் கடவுளைப்பற்றிக் கனிந்துருகி உரைக்கும் பின்வரும் சொற்றொடர்களைப் பருகி இன்புறுங்கள் :

“ மன்னன் இராவணனை மாமண்டு வெஞ்சமத்துப்
பொன்முடிகள் பத்தும் புரளச் சரந்துரந்து
தென்னுலகம் ஏற்றுவித்த சேவகன் !
பொன்னி மணிகொழிக்கும் பூங்குடந்தைப் போர்விடை !
தென்னன் குறுங்குடியுள் செம்பவளக் குன்று !
மன்னிய தண்சேறை வள்ளல் ! - மாமலர்மேல்,
அன்னம் துயிலும் அணிநீர் வயலாலி
என்னுடைய இன்னமுது !
புல்லாணித் தென்னன் தமிழ் !”

திருப்புல்லாணிக்கடல் துறைக்கு உரிமைபூண்ட பாண்டியனுடைய தமிழே கடவுள் என்று திருமங்கை ஆழ்வார் கூறும் கற்கண்டைச் சுவைக்கும்போது நமக்கு ஏற்படும் இன்பத்திற்கு எல்லையுமுண்டோ ?

# உயர்வு நவிற்சி அணி

அணி என்பது ஐந்து இலக்கணங்களுள் ஒன்று. ஐந்து இலக்கணங்களாவன:— எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்பன. வடநூலார் இவ் அணியிலக் கணத்தை அலங்கார சாஸ்திர மென்பர். ஆசிரியர் தொல்காப்பியனுர் உவமையணி என்ற ஒன்றைப்பற்றி மட்டுமே தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் கூறினர். தமிழில் அணிகள் பலவாக வகுக்கப்பட்டது பிற்காலத்தில். இலக்கண விளக்க நூலுடையார், அவ் உவமம் ஒன்றையே இருபத்துநான்கு வகையாகப் பிரித்தும், வேறு எட்டு அணிகள் சேர்த்தும் உரைத்தார் தம் நூலில். தண்டியலங்காரம், அணிகளை முப்பத் தைந்தாக வகுக்கிறது. மாறனலங்காரமோ அறுபத்து நான்கு அணிகள் கூறுகின்றது. இப்படியே பல. சந்திராலோகம் என்னும் அணி நூல், அணிகள் நூறு என உரைக்கின்றது. அவற்றுள் ஒன்று உயர்வு நவிற்சி அணியென்பது.

உயர்வு நவிற்சி அணியாவது, ஒரு பொருளை அதற் குரிய சொல்லால் சொல்லாமல் கேட்போர் மகிழுமாறு உயர்ந்த இனிய சொற்களால் சொல்லி இன்புறுத்தும் அழகு ஆகும்.

"ஒருபொருள் தன்சொல்லின் உரைக்கப் படாஅது
கேட்போர் உள்மகிழ் கிளப்பதும் இஃதுஅஃது
அன்றுஎனத் தெரிந்தும் ஆம்எனத் துணியப்

படுவதூஉம் ஆகிய பான்மையில் தேறற்கு,
ஒருபுலம் ஆதல் உயர்வு நவிற்சி ''

என்பது சூத்திரம். நேரே ஒன்றைப்பற்றி, அதனைக் குறிக்கும் சொல்லால் சொல்லக்கூடாது; வேறு சொற்களைப் பெய்து சொல்லவேண்டும். அச் சொற்கள் கேட்போரை இன்புறுத்தல் வேண்டும். அச்சொல் அதைத்தான் குறிக்கின்றது என்பதை ஐயம் அறத் தெளியுமாறு அது அமைதல் வேண்டும். அது உயர்வு நவிற்சி அணி ஆகின்றது. இதனை வடநூலார் அதிசயோக்தி அலங்காரம் என்று கூறுவர். இவ் உயர்வு நவிற்சி அணி ஏழு வகைப்படும் :

'' மற்றஃது ஏழு வகைப்படும் என்ப''

எனச் சூத்திரம் சொல்கின்றது. அவற்றை விரிப்பின் கேட்போரை அயர்ச்சியில் ஆழ்த்திவிடும் என அஞ்சுகின்றேன். இலக்கணத்தை விரித்துப்பேசி மெய்மறந்து தூங்கிவிடச் செய்யும் முயற்சியில் நான் இறங்குதல் ஆகாதல்லவா? எனவே, அதை விடுத்து, பொதுவாக உயர்வு நவிற்சி அணியின்பாற்பட்ட அருந்தமிழ்ப் பாக்கள் சிலவற்றைச் சொல்லி அன்பர்களை இன்புறுத்த முயல்வேன். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் காதலிக்கும் கட்டிக்கரும்பை நோக்குகின்றார். சுந்தரமூர்த்திகள் யார்? "தேவரும் மறையும் இன்னமும் காணாச் செஞ்சடைக் கடவுளைப்பாடி; யாவரும் மதித்தோர் மூவரில்" ஒருவர். ஒரு அணங்கைக்கண்டு அன்னார் தெய்வக் காதல் கொள்கின்றார். அப்பொருள் அவருக்கு எப்படிக் காட்சியளிக்கிறது? கற்பகத்தின் பூங்கொம்பு எதிரே ஒசிந்து நிற்பதுபோல் தோன்றுகிறது. காமராஜனது பெருவாழ்வே ஓர் உருவெடுத்து வந்து நிற்பதாக அப்பெருமான் காண்கின்றார். புண்ணியம் அனைத்தும் சேர்ந்து செய்த புண்ணியம் அவர் அதிரே தோன்றுவ

தாக அன்னுர் கருதுகின்ருர். கண்களாகிய குவளைப் பூக்களையும், வாயாகிய பவளத்தையும், மதியாகிய முகத்தையும், புயலாகிய கூந்தலையும் சுமந்து நிற்கின்ற, வாசனை வீசும் கொடியொன்று அடியார் கண்முன் துவள்கின்றது. ஓர் அற்புதம் அவர் திருமுன் கூத்தாடுகின்றது. முடிவில் அது சிவன் அருளே எனச் சுந்தரமூர்த்திகள் உணர்கிருர். சேக்கிழார் அடிகள் செப்பும் அருமை வாய்ந்த உயர்வு நவிற்சி அணிப் பாடல் ஒன்று பரவையாரை இவ்வாறு சித்திரிக்கின்றது. பாவைப்பருகி இன்புறுங்கள் :

*" கற்பகத்தின் பூங்கொம்போ !*
*காமன் தன் பெருவாழ்வோ !*
*பொற்புடைய புண்ணியத்தின்*
*புண்ணியமோ ! புயல்சுமந்து*
*விற்குவளை பவளமலர்*
*மதிபூத்த விரைக்கொடியோ !*
*அற்புதமோ ! சிவன்அருளோ !*
*அறியேன்என்று அதிசயித்தார்."*

இதுதான் உயர்வு நவிற்சி அணி. இங்கே சுந்தரமூர்த்திகள் கண்டதும் நாம் காண்பதும் ஒரு நங்கையை. பாட்டில் 'பெண்' என்ற சொல் ஏதும் இல்லை. சொற்கள் அனைத்தும் வேறு. எனினும் நாம் காண்பது என்ன ? சொல்லின் பொருளுக்கு மேம்பட்ட ஒரு பொருள். நமது பாரதியார் கூறியதுபோல வயது பதினறுடைய அழகிய இள மங்கை கூத்தாடுகின்ருள். நம்பி ஆரூரரின் காதற்கிழத்தி - பேர் பரவை - பெண்மையினில் பெரும்பரவை, நம் கண்முன் இங்கு ஆநந்தக் கூத்தாடவில்லையா ?

மனைவியைக் கணவன் எவ்வாறு அழைத்தல் வேண்டும் என்பதை இளங்கோவடிகள் மிக நயமாக

எடுத்தியம்புகிறர் தாம் செய்த சிலப்பதிகாரத்தில். நாயகிகளை விரும்பத்தகாத முறையில் விளிக்கும் இக்கால நாயகர்கள் பின்வரும் சிலப்பதிகார வரிகளை மறவாதிருப் பாராக.

"மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே !
காசறு விரையே ! கரும்பே ! தேனே !
பொன்னே ! கொடியே ! புனைபூங் கோதாய் !
நாணின் பாவாய் ! நீள்நில விளக்கே !
கற்பின் கொழுந்தே ! பொற்பின் செல்வி !

மிக எளிய சொற்கள். அழகிய சொற்கள். தேன் ஒழுகும் இனிய சொற்கள். இவ் அடிகளில் உயர்வு நவிற்சி அணி மிக நயமாக அமைந்து கிடக்கின்றது. 'பெண்ணே' என்று நேராகக்கூப்பிடும் சொல் யாண்டும் இல்லை.

*'பத்தரைமாற்றுத் தங்கமே, விலைமதிக்க முடியாத முத்தமே,*
*கோதில்லாத நறுமணமே, கருப்பஞ்சாறே, கொம்புத்தே [னே,*
*பொன்னே, வல்லியே, பூமாலையே, உயிர் ஓவியப்*
*பதுமையே, இருள்போக்கும் திருவிளக்கே,*
*கற்புக் கொழுந்தே, அழகுத் தெய்வமே'*

என்று கோடிமுறை சொன்னலும் வாய் சலிக்குமா? இதுவே உயர்வு நவிற்சி அணி.

தேவைப் பாடிய நாவினுல் இணையில்லாத கோவை யொன்று பாடினுர் மணிவாசகப் பெருமான், அத்திருக் கோவையாருள் உயர்வு நவிற்சி அணி கூறும் ஒரு நல்ல கட்டளைக் கலித்துறை :

காதல்கொண்ட ஒரு தலைவனை நகையாடினுன் தோழன். அவ் ஆருயிர்த் தோழனைப் பார்த்து, தான் கொண்ட காதல் நோய்க்குக் காரணமாகவிருந்த

கன்னியர் திலகத்தின் பெருமையை விரித்துரைக்கின்ருன் தலைவன். அவள் நலத்தை உயர்வு நவிற்சி அணியால் புனைந்துரைத்து மகிழ்கின்ருன் தலைவன். 'ஏ தோழ, நீ அப்பொருளைக் கண்டால் அதனுல் தாக்குண்ட என்னை இவ்வாறு இழித்துரைக்கமாட்டாய். நீ பார்க்கவில்லை. தில்லைச் சிற்றம்பலக் கூத்தனுக்குச் சொந்தமான கயிலைமலையிலே உலாவுகின்ற அம்மயிலை - அணிகள் புரள விளங்கும் கொங்கைகளையுடைய என் ஆவியை - எனது ஓவியப் பொற்கொழுந்தை, நீ கண்ணாரக் கண்டால் இப்படி ஒருநாளும் சொல்லமாட்டாய் என்பது நிச்சயம்.

"சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத்
தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான்
கயிலை மயிலைமன் னும்
பூணிற்பொலிகொங்கை ஆவியை
ஓவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை
மென்தோள் கரும்பினையே."

தான் விரும்பிய பெண்ணை, 'பெண்' என்ற சொல்லால் குறிக்காமல், கயிலை மயிலை-பூணிற் பொலிகொங்கை ஆவியை—ஓவியப் பொற்கொழுந்தை என்ற பிற சொற்களால் குறிப்பதே உயர்வு நவிற்சி அணி. திருவெங்கைக் கோவையில் ஒரு உயர்வு நவிற்சியணிச் சித்திரம். சோலையிலே ஒரு பெண் எதிர்ப்படுகிருள். அவளைக் காதலன் கூற்ருக உயர்வு நவிற்சி யணியில் சித்திரிக்கின்ருர் ஆசிரியர் :

"பூவும் பழுத்த செழுந்தீங் கனியும் பொழியமிழ்தம்
மேவும் குடங்கள் இரண்டுட னேஇரு மீனுங்கொண்டு
சேவுந் தழகர் திருவெங்கை வாணர் சிலம்பில்மலர்
தூவும் பொழிலில் எதிர்ப்பட்ட தால்ஒரு தூமணியே."

'திருவெங்கைவாணர் மலைமேல் உள்ள சிங்காரப் பூஞ்சோலையில் ஒரு பரிசுத்தமான மணி என் கண்ணெதிரே பட்டது. அம்மணி சில பூக்களையும், நன்ருகப் பழுத்துக் கனிந்த கொவ்வைக் கனியையும் அமிழ்தம் அடைத்து வைக்கப்பெற்ற இரண்டு தங்கக்குடங்களையும் இரண்டு மீன்களையும் சுமந்துகொண்டு என் எதிரில் தோன்றியது'.

இங்கே சுமந்த பூக்கள் முகம், கை, மூக்கு முதலிய அங்கங்கள். பழுத்த செழுந் தீங்கனி செவ்விய இதழ். அமிழ்த கலசங்கள் தனங்கள். மீன்கள் கண்கள். மங்கையை மணியென்று கூறி அவள் சுமந்த உறுப்புக்களை அவற்றின் சொற்களால் கூருது பூ, கனி, குடம், மீன் ஆகிய சொற்களைப் பெய்து கூறியமையால் உயர்வு நவிற்சி அணி ஆயிற்று.

இன்பக் களஞ்சியம் என்று நவிலத்தக்க 'விறலிவிடு தூது' வகுத்த ஆசிரியர், மோகன முத்தைப்பற்றிக் கூறுங்கால்,

*"சோலைப் பசுங்குயிலைச் சொன்னப் பசுங்கிளியைக்*
*கோலப் பருவமுலைக் கோமளத்தை - வேலையன்ன*
*காம ரசதாழிக் கரும்பைச் செழுங்கனியைத்*
*தேமல்இளங் கொங்கைத் திரவியத்தைக் - காமுகருக்கு*
*அற்புதத்தைத் தேனை அதிமோக ரஞ்சிதத்தைக்*
*கற்பகத்தைச் சர்க்கரையைக் கற்கண்டை"*

என்று உயர்வு நவிற்சி அணியில் அடுக்கும் சொற்றெடர்கள் சாலவும் இன்புறுத்துவன. இனிய காதல் பாடிய சுப்ரதீபக் கவி, பூங்காவில் தோன்றிய பெண்ணணங்கை அலங்கரித்துக் கூறி, படிப்போரை இன்பக் கடலுள் ஆழ்த்தும் உயர்வு நவிற்சி பெரிதும் நயம் வாய்ந்தது :

" கம்மியன்கை யால்அடித்துக் காய்ச்சிவெட்டித் தீராமல்
செம்மலரோன் கைம்மலரால் செய்துவிட்ட பொற்பாவை
கையால் பிடித்தொருவர் கட்டஇதழ் கன்ருமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை
ஓங்கு மலைக்காட்டின் உள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கும் நவரசத்தேன்
மொய்த்த மலைக்காட்டு முள்ளூடு அலையாமல்
மெத்தையின் மேலேறி விளையாடும் தோகைமயில்
கொம்புதொறும் போய்த்தாவிக் கூவித் திரியாமல்
அம்பொன்மணி ஊசலிருந்து ஆடும் குயிற்பேடு
கொஞ்சி மொழிகுழறிக் கூட்டில் கிடவாமல்
செஞ்சொல் மதனகலை செப்புங் கிளிப்பேடு."

பொற்பாவை - ஆனுல் சிற்பி கையால் அடித்துச் செய்யவில்லை. பிர்மா தன் கையால் செய்த பாவை:

" கம்மியன்கை யால்அடித்துக் காய்ச்சிவெட்டித் தீராமல்
செம்மலரோன் கைம்மலரால் செய்துவிட்ட பொற்பாவை."

பூமாலை. பூத்தொடுப்பவன் கட்டும்போது கைபட்டு இதழ் கன்றிப்போகாத மாலை. தாயர் மடியில் தவழும் பூமாலை:

"கையால் பிடித்தொருவர் கட்டஇதழ் கன்ருமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை."

இனிக்கும் தேன். பெரிய மலைகளிலே உயரத் தூங்காமல் மெல்லிய பூவணையிலே தூங்கும் தேன்:

" ஓங்கு மலைக்காட்டின் உள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கும் நவரசத்தேன்' "

தோகை மயில். இம்மயில் மலைக்காட்டு முள்ளிலே உலவாது. இது மெத்தைமேல் விளையாடும் மயில்:

"மொய்த்த மலைக்காட்டு முள்ளூடு அலையாமல்
மெத்தையின் மேலேறி விளையாடும் தோகைமயில்

பெண் குயில். இக்குயில் மரங்களிலே தாவிக் குதித்துக் கூவாது இது ஊஞ்சலிலே இருந்து ஆடும் குயில்:

"கொம்புதொறும் போய்த்தாவிக் கூவித் திரியாமல்
அம்பொன்மணி ஊசலிருந்து ஆடும் குயிற்பேடு."

கிளிப் பேடு. ஆனுல் இக்கிளி கூட்டினுள்ளே அடைபட்டுக் கிடந்து குழறி மொழி பகராது. இக்கிளி மதன கலை பேசும்:

"கொஞ்சி மொழிகுழறிக் கூட்டில் கிடவாமல்
செஞ்சொல் மதனகலை செப்புங் கிளிப்பேடு."

பாடல்கள் சிறந்த பொருள் நயங் கொண்டவை. பாலும் தேனும் கலந்து குழைத்து வடித்த சொற்கள். உயர்வு நவிற்சி அணி.

இராமபிரானின் பட்டாபிஷேகக் காட்சியைக் கம்பர் உயர்வு நவிற்சி அணியாகக் காட்டுகின்ருர். ஓர் அரிய கவியில். மரகத மலை ஒன்று தோன்றுகிறது. அப்பச்சை மாமலையில் செந்தாமரை மலர் காடாகப் பூத்திருக்கிறது. அம்மலையில் காதளவு ஓடிய வேல் போன்ற கண்களை யுடைய ஒரு மயில் வீற்றிருக்கின்றது:

"மரகத சைலம் செந்தா
மரைமலர்க் காடு பூத்துத்
திரைகெழு கங்கை வீசும்
திவலையால் நனைந்து செய்ய
இருகுழை தொடரும் வேற்கண்
மயிலொடும் இருந்தது ஏய்ப்பப்
பெருகிய செவ்வி கண்டார்
பிறப்பெனும் பிணிகள் தீர்ந்தார்."

இராமன் மரகத மலே அவனுடைய "கண்ணும் திருவடியும் கையும் திருவாயும் செய்ய" ஆதலால் அம் மரகத சயிலம் செந்தாமரை மலர்க்காடு பூத்தது. மயில் சீதை. அம் மயிலொடும் இருந்த மரகத மலேயைக் காணும் பேறு பெற்றவர்கள் பிறப்பெனும் பிணிகள் தீர்ந்து, பேராநந்தப் பெருவாழ்வு பெற்ருர். இராமனே மலேயாகவும் சீதையை மயிலாகவும் அலங்கரித்தது உயர்வு நவிற்சி அணி.

# குயில் பாட்டு

குயில் பாட்டு நமது காலத்தில் வாழ்ந்து இன்றைக்கு இருபத்திரண்டு ஆண்டுகட்குமுன் (1921ல்) உடல் நீத்த அருங்கவி சுப்பிரமணிய பாரதியாரால் பாடப்பெற்றது. குயில் பாட்டு ஒரு கற்பனைச் சித்திரம். அது முழுதும் நயமான காதல் சுவை கொண்டது. குயில் பாட்டு ஏறக்குறைய எழுநூற்றைம்பது அடிகளை உடையது. அப்பாட்டு, யாப்பு இலக்கணப்படி முற்றும் வெண்பா விற்குரிய வெண்தளை என்னும் கட்டுக்கோப்பு அமைந் தது. பாரதியாரின் கவிச்சிறப்பைக் காட்டும் மிக உய ரிய பாடல்களிலே குயில் பாட்டு, முதல் வரிசையிலே இடம்பெற வல்லது.

பாரதி, யாப்பு இலக்கணத்தை – அதாவது பாட்டுக் கட்டுவதற்கு என்றே தமிழில் அமைந்த விதியை நன்கு பயின்றவர் என்பதை அவர் பாடிய வெண்பாக் களும் விருத்தங்களும் சிறப்பாக இக் குயில் பாட்டும் நன்ருக எடுத்துக்காட்டுகின்றன. அன்னர் கண்ணிகள் அதிகமாகப் பாடினர் என்பதற்காக அவர் யாப்பு அறி யாதவர் எனக் கூறுதல் தவறு. இராமலிங்க சுவாமிகளும் தாயுமானப் பெரியாரும் அன்ன பிறரும் கண்ணிகள் பாடவில்லையா? பாரதி, சிலர் கருதுமாறு ஆவேச உணர்ச்சி வயப்பட்டு வாயில்வந்தபடி பாடிய ஒருவரல்லர். அவர் நன்கு இலக்கிய இலக்கணங் கற்றுத் தேர்ந்த நல்ல பண்பட்ட கவி. அதற்கு அவருடைய பாக்களே சான்று. பாரதியின் கவிதை மேன்மையை விளக்குவது

அவர்தம் தேசீயப் பாட்டுக்களல்ல. பாரதி பாட்டுக்களிலே கவித்துவம் களிநடம்புரிவது கண்ணன் பாட்டிலும், குயில்பாட்டிலும், பாஞ்சாலி சபதத்திலும் அன்ன பிறவிலுமே

குயில் பாட்டு என்பது குயிலைப் பொருளாக வைத்துப் பாடிய பாட்டு. இவ் உலகத் தலைமை இன்பத்துக்கு உறுதுணையான பொருள்களுள் குயில் ஒன்று குயில் இவ் உலகை ஆட்டுவிக்கும் மன்மதனுக்கு வெற்றிச் சின்னம். அக் குயில் வாயினின்றும் இன்னிசையை எழுப்பியே மக்களை மயக்குகின்ருன் காமன் எனக் கவிஞர்கள் கூறுகின்றனர். அச் சோலைப் பசுங் குயிலைக் கொண்டே ஒரு இனிமை நிறைந்த பாடலை எழுப்பி யிருக்கின்ருர் பாரதி.

நமது பாரதியின் குயில், முன் பிறப்பில் ஒரு நல்ல பெண் வடிவு பெற்றிருந்தது. அவ் அழகிய நங்கை வளர்ந்து பருவமடைந்ததும் அவ் அணங்கிற்கு மணம் பேசினர். அவள் பெயர் குயிலி. அக்குயிலின் சொந்த அம்மான் மகன் மாடன் என்பவன் அவளை மணக்க விரும்பினுன். அம் மலைச் சாரலில் வாழ்ந்த ஒரு வேடுவர் தலைவன் மகனும் குயிலியை அடைய ஆசைப்பட்டான். அவன் பெயர் குரங்கன்.

சேரநாட்டரசன் ஒருநாள் வேட்டை கருதி அம் மலைப்பக்கம் வந்தான். அவ் அழகெலாம் ஒருங்கே கொண்ட குயிலியைக் கண்டான் மலைநாட்டு மன்னன். கொண்டான் காதல். இருவர் கண்களும் நோக்கின. குயிலியும் உடன்பட்டாள். இருவரும் கலந்தனர். குயிலி மலைச்சாரலுக்கு விளையாடச் சென்றமை யறிந்து, மாடனும் குரங்கனும் தனித் தனியாக அங்கு விரைந்து ஓடினர். அவ்விடத்து மன்னன் குயிலியின் "கோவை

யிதழ் பருகிக் கொண்டிருக்கும் வேளையிலே" கண்டார் மாடனும் குரங்கனும். சட்டென்று அவ் இருவரும் வாளை வீசினுர் வேந்தன் மீது. அரசன் இறந்துபட்டான். இறக்குமுன் மாடன் குரங்கன் இருவரையும் வெட்டி வீழ்த்திவிட்டான் வேந்தன். இது சென்ற பிறவிக் கதை. இப்பிறப்பிலே குயிலுருவம் கொண்டாள் குயிலி. சேர மன்னன் தொண்டை வளநாட்டில் ஓர் மானுடனுகப் பிறந்திருக்கின்ருன்.

மாடன் மாடாகவும் குரங்கன் குரங்காகவும் பிறந்து குயில் திரியும் சோலையிலே சுற்றிச் சுற்றி வருகின்றனர். குயிலின் உண்மைக் காதலன் சோலையியே குயிலைக் கண்டு அதன் பாட்டைக் கேட்டுப் பரவசப்படுகின்ருன். குயில் கூறும் காதல் மொழிகளைக் கேட்டு மனம் உருகு கின்ருன் அவன். பின்னர் குயிலைச் சுற்றித் திரியும் மாட்டையும் குரங்கையும் பார்த்து அக்குயில் பேசும் காதல் பேச்சுக்கள் அவனுக்குக் கடுங்கோபத்தையும் திகைப்பையும் உண்டாக்குகின்றன. பிறகு குயில் வாயிலாக உண்மைஉணர்கின்ருன். குயிலை முத்தமிடுகின்ருன் குயிலைக் காணவில்லை. உடனே குயில் மறைந்துவிடு கின்றது. "கொண்டதனை முத்தமிட்டான் கோகிலத்தை காணவில்லை." தனது பழைய ஆசைக் குயிலி தோன்று கின்ருள். பிறகு கேட்பானேன்! அவன் பெற்ற ஆனந் தத்தின் எல்லையை யாரால் காணமுடியும்? இதுவே கதையின் சுருக்கத்தினும் சுருக்கம். இக்கதையை அருமையான கற்பனைக் களஞ்சியமாகச் சமைத்திருக் கின்ருர் பாரதி. பாட்டினுடைய தொடக்கம் பாரதி வாழ்ந்த பாண்டிச்சேரியிலே ஓர் சோலையிலே ஆரம்ப மாகிறது.

"காலை இளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்

மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவரு
வேகத் திரைகளினுல் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகரின்
மேற்கே சிறுதொலேயில் மேவுமொரு மாஞ்சோலே.''

அந்தச் சோலேயிலே ஒரு மரக்கிளேயில் இருந்து பாடுகின்றது ஒரு பெண் குயில். எப்படிப் பாடுகின்றது அது?

'' ஆண்குயில்கள், மேனி புளகம்உற
ஆற்ற லழிவுபெற உள்ளத் தனல்பெருகச்
சோலேப் பறவையெலாஞ் சூழ்ந்து பரவசமாய்க்
காலேக் கடனிற் கருத்தின்றிக் கேட்டிருக்க,
இன்னமுதைக் காற்றினிடைஎங்குங் கலந்ததுபோல்
மின்னற் சுவைதான் மெலிதாய் மிகஇனிதாய்
வந்து பரவுதல்போல் ; வானத்து மோகினியாள்
இந்தஉரு எய்தித்தன் ஏற்றம் விளக்குதல்போல் ;''

இன்னிசைத் தீம்பாடல் இசைத்தது குயில். அப் பாட்டினிலே கலந்து உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டான் இளேஞன். நான் குயிலாகப் பிறந்திருக்கக் கூடாதா? குயிலுருவடைந்து அக்குயிலேக் கூடிக் குலாவி வாழும் பேறு பெறுவேனு? என்று இரங்குகின்ருன் ;

'' மனிதஉரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ ?
இனிதுஇக் குயில்பேட்டை என்றும் பிரியாமல்
காதலித்துக் கூடிக் களிப்புடனே வாழேனே ?''

என்று இயம்பியவன்.

'' அன்றுநான் கேட்டது அமரர்தாம் கேட்பாரோ ?''
என ஏங்குகின்ருன். குயில் என்ன பாடியது?

'' காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்.

கூடல் கூடல் கூடல்
கூடிப் பின்னே குமரன்போயில்
வாடல் வாடல் வாடல்.''

குயில் இவ்வாறு கூறியதைக் கேட்ட இளைஞன் வியப்புற்று அதன் அணித்தே நெருங்கி,

''பேடே! திரவியமே! பேரின்பப் பாட்டுடையாய்!
ஏழுலகும் இன்பத்தீ ஏற்றுந் திறனுடையாய்!
பீழைஉனக்கு எய்தியதென் பேசாய்!''

என்று கேட்டான்.

''காதலை வேண்டிக் கரைகின்றேன் : இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்''

என்று பதில் சொல்லியது குயில். "உன்னைக் காதல் நோய் பற்றியதற்குக் காரணம் என்ன? உன் பாட்டைக் கண்டு மயங்காதவர் எவரும் இருக்க முடியுமா? நீ இன்னும் துணை பெறவில்லையா?

''வானத்துப் புள்ளெல்லாம் மையலுறப் பாடுகின்றாய்!
ஞானத்திற் புட்களினும் நன்கு சிறந்துள்ளாய்!
காதலர்நீ எய்துகிலாக் காரணந்தான் யாது?''

என்று வினவினான். குயில் தனது நிலைமையைச் சிறிது சொல்லி, "நான்காம் நாள் வா, எல்லாம் சொல்லுகிறேன்" என்றது. திரும்பிய அவன் பித்துப்பிடித்தவன் போலாய் விட்டான். அவன் கண்ட பொருளெல்லாம் குயிலாகத் தோன்றின அவன் கண்களுக்கு. நான்கு நாட்களை அவன் எப்படித் தாங்குவான்? ஒருநாள் ஒரு யுகமாகக் கழிந்தது.

''நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடுஅனைத்தும்
தாளம் படுமோ தறிபடுமோ யார்படுவார்?''

என அவன் கூறுவது பரிதாபமாக இருக்கிறது. பாடுபடுவதற்குத் தாளத்தையும் தறியையும் சான்ருகப் பாரதியார் காட்டுவன நயம் வாய்ந்தவை. சலிக்கும் உள்ளத்தைக் கூறவந்த மணிவாசகப் பெருந்தகை, பாவிலே குழல் ஆடுவதுபோல் என்று கூறுகின்ருர்."பாவிடையாடு குழல் போல் கரந்து பரந்த துள்ளம்" என்பது திருவாசகம்.

*"பாவில் குழல்போல நின்றுழலும் கொள்கைத்தே?"*

என்ருர் நளவெண்பா ஆசிரியர். "தறிபடுமோ" என்று சொல்லியபோது பாரதியார் இவற்றை நினைவுகூர்ந்திருத்தல் கூடும்.

தாளமாகவும் தறியாகவும் நின்று துடித்த அவன், குயில் சொல்லிய நான்கு நாட்கள் பொறுத்திருக்க ஆற்ருகி, மறுநாளே சோலை நோக்கி ஓடினன். அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. குயில் மரத்தின் கிளையில் இருந்தது. குரங்கு ஒன்று பக்கத்தே வீற்றிருந்தது. அதுதான் போன பிறவியில் குரங்கன். குரங்கிடம் காதல் பேச்சு பேசிக் கொண்டிருந்தது குயில். குரங்கைப்பற்றிய கவியின் அழகிய வர்ணனைகள் பெரிதும் இன்புறுத்துவன.

குயில் கூறுகின்றது குரங்கைப் பார்த்து :

*"வானரரே !*
*ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே ! பெண்மைதான்*
*எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே ! நின்னழகைத்*
*தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?*
*மண்ணி லுயிர்க்கெல்லாந் தலைவரென மானிடரே*
*எண்ணிநின்ருர் தம்மை ; எனிலொருகால், ஊர்வகுத்*
*கோயில், அரசு, குடிவகுப்புப் போன்றசில [தல்,*

வாயிலிலே அந்த மனிதர் உயர்வெனலாம்.
மேனி அழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர்நிகர் ஆவாரோ?
ஆன வரையும் அவர்முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப்போல் ஆக்க முயன்றிடினும்,
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போல் ஆவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு கந்தைபோல்
வேகமுறத் தாவுகையில் வீசி யெழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?''

இந்த நிகழ்ச்சி கண்டு பலவிதமான எண்ணங்களுடன் திரும்பிய இளைஞன் மூன்றாம் நாளும் அவ்விடம் சென்றான். அங்கு மற்றொரு நிகழ்ச்சியைக் கண்டு, வியப்படைந்தான். குரங்கிற்குப் பதில் ஒரு மாடு. மாட்டைக் காதலிக்கின்றது குயில். இந்த மாடே போன பிறவியில் மாடன். குரங்கை அலங்கரித்ததுபோலவே மாட்டின் நலனையும் புனைந்து உரைத்தது குயில்:

''நந்தியே!
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே மாடாகக் காட்சிதரு மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்.

காளையர்த முள்ளே கனமிகுந்தீர் ஆரியரே!
நீள முகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோற் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சு புறச்சுமையும், வீரத் திருவாலும்,
வானத் திடிபோல மாவென் றுறுமுவதும்,
ஈனப் பறவை முதுகின்மேல் ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கு நேர்மையும்பல்
காலநான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.
ஆடவர்த முள்ளே அடியாள் உமைத்தெரிந்தேன்.
மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர் மேனிவிடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரஇசை பாடுவேன்.
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்
வாலில் அடிபட்டு மனமகிழ்வேன். மாவென்றே
ஒலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்.
மேனியிலே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்.
கானிடையே சுற்றிக் கழனியெலாம் மேய்ந்துநீர்
மிக்க உண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்
பக்கத் திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்.
காளை யெருதரே! காட்டிலுயர் வீரரே!
தாளைச் சரணடைந்தேன்; தையலெனைக்
காத்தருள்வீர்!"

இக்குயிலோசை கேட்டான்; பதைபதைத்தான்; ஒன்றும் புரியவில்லை அவனுக்கு; வீடு சென்றான்; நான்காம் நாளும் போந்தான்; குயிலைப் பார்த்துக் கேட்கிறான் ஆத்திரம் பொங்க:

"நீசக் குயிலே! நிலையறியாப் பொய்ம்மையே;
ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும்
எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை
நண்ணியிங்குக் கேட்க நடத்திவந்தாய் போலும்எனை?"

இளைஞன் இவ்வாறு கேட்டவுடன் குயில் தனது கதையை ரசமாகச் சொல்லிற்று.

*''கீழ்ப்பறவைச் சாதியிலே நான்பிறந்தேன்''*

என்று குயிலின் கூற்ருகப் பாரதி பகர்வது,

*''கீழ்ப்பறவைச் சாதிகளும் வேட்டமுறும்''*

என்று வடலூர் வள்ளலார் கூறும் சொற்ருெடரை ஞாபகப்படுத்துகிறது.

*''நின்னை அவன் நோக்கினன், நீ அவனை நோக்கிநின்ருய்''*

என்ற பாரதியின் வரி,

*''அண்ணலும் நோக்கினன், அவளும் நோக்கினள்''*

என்ற கவிச்சக்கரவர்த்தி வரியின் மறுபிறப்பாகும்.

குயிலின் கதை கேட்டான். அன்போடு குயிலை எடுத்தான் கையில். வெறிகொண்டு அதனை முத்த மிட்டான். குயிலைக் காணவில்லை !

*'' அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு*
*முன்வைத்து நோக்கியபின் மூண்டுவரும் இன்பவெறி*
*கொண்டதனை முத்தமிட்டேன் கோகிலத்தைக்*
*காணவில்லை!''*

ஆனல் அவன் கண்டது என்ன ?

*'' விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!*
*ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்*
*தேசமடா! பெண்மைதான் தெய்விகமாங் காட்சியடா!*
*பெண்ணொருத்தி அங்குநின்ருள். பேருவகைகொண்டுதான்*
*கண்ணெடுக்கா தென்னைக் கணப்பொழுது நோக்கினள்.*
*சற்றே தலைகுனிந்தாள். சாமீ! இவளழகை*
*எற்றே தமிழி லிசைத்திடுவேன்? கண்ணிரண்டும்*

*ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?*
*மீள விழியில் மிதந்த கவிதையெலாம்*
*சொல்லில் அகப்படுமோ? தூயசுடர் முத்தையொப்பாம்*
*பல்லிற் கனியிதழிற் பாய்ந்த நிலவினையான்*
*என்றும் மறத்தல் இயலுமோ? பாரின்மிசை*
*நின்றதொரு மின்கொடிபோல் நேர்ந்தமணிப் [பெண்ணரசின்*
*மேனி நலத்தினையும் வெட்டினையுங் கட்டினையும்*
*தேனில் இனியாள் திருத்த நிலையினையும்*
*மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ? ஓர்வார்த்தை*
*கற்றவர்க்குச் சொல்வேன்: கவிதைக் கனிபிழிந்த*
*காற்றினிலே பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்*
*ஏற்றி யதனோடே யின்னமுதைத் தான்கலந்து*
*காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்*
*மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்!''*

திகைப்பு! பெருந் திகைப்பு! ஒரே திகைப்பு! ஒசிந்த பூங்கொடியொன்று துவண்டு அவனைச்சுற்றி நிற்கின்றது.

*"நண்ணித் தழுவி நறுங்கள் இதழினையே*
*முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்*
*சித்தம் மயங்கிச் சிலபோழ்து இருந்தபின்னே*
*பக்கத் திருந்தமணிப் பாவையுடன் சோலையெலாம்*
*ஒக்க மறைந்திடலும் ஓஹோ எனக்கதறி"*

வீழ்ந்தான். அவ்வளவுதான்! ஒன்றுமில்லை. எல்லாம் மாயை! மறைந்துவிட்டது! கண்டது கற்பனைக் கனவு! குயிலின் காதலனாக இருந்தவர், புதுச்சேரியிலிருந்த சுப்பிரமணிய பாரதியாகவே மாறி நமக்குக் காட்சியளிக்கின்றார். அவரிடம் நாம் எதைக் காணமுடியும்? அதை நயம்பட உரைக்கின்றார் கவி பாரதி.

"சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி எழுதுகோல்
பத்திரிகைக் கூட்டம் பழம்பாய் வரிசையெலாம்
ஒத்திருக்க நாம்வீட்டில் உள்ளோம் எனஉணர்ந்தேன்."

இவ்வாறு உணர்ந்த பாரதி.

"சோலை-குயில்-காதல் சொன்னகதை அத்தனையும்
மாலை அழகின் மயக்கத்தால் உள்ளத்தே [கொண்டேன்.
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே கண்டு
ஆன்ற தமிழ்ப்புலவீர்! கற்பனையே ஆனாலும்,
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ ?"

என்று கூறிக் குயில் பாட்டை முடிக்கின்றார். குயில் பாட்டில் பற்பல உலகியல் உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. குயில் பாட்டில் கற்பனையும் காதல் ரசமும் பெருக்கெடுத் தோடுகின்றன. குயில் பாட்டை நுகர்வோர் தீந்தமிழ்த்தேன் பருகி இன்புறுவர்.

